A
87

எமவாதம்.

இஃது

நாகை வெளிப்பாளையம்

கு. குமாரசாமி நாடார் அவர்கள் குமாரனும், K.

நாகை ஹிந்து மதாபிமான சங்கம் காரியதரிசி

ப. லெ. வெங்கிட்டராம சாஸ்திரிகளின்

பிரியசிஷ்யனும்,

தஞ்சை ஜில்லா நாடார் சங்கம்

காரியதரிசியுமான

S. K. ராமசாமி நாடார் அவர்களால்

இயற்றப்பட்டு

10 OCT 1927
Accn. No: 179989
No. of Pages 78

நாகபட்டணம்

ஜனோபகார அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

முதல் பதிப்பு 1000 காப்பிகள்.

Registered Copy Right. ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது

(1927) பிரபவ-ஸ்ரு ஆவணிமீ.

இதன் விலை] [ரூ. 0—12—0.

எம வாதம்.

இதில், மார்க்கண்டேயரை ஆயசு நிர்ணயம் கழித்து அதம் செய்ய
எத்தனித்த எமதர்மருஜரை பரமசிவன் நியாய விரோதமாய்
கொன்றதற்காகப் பரமசிவன் மீதும் மார்க்கண்டேயர் மீதும்
எமதர்மராஜர் கொடுத்த பிராதும், சாக்ஷிகள் வாக்கு மூலங்களும்,
கிராசும், உபய தரப்பு வக்கீல்களின் விவாதங்களும்,
கோர்ட்டு தீர்ப்பும் அடங்கியுள்ளது.

இஃது
நாகை வெளிப்பாளையம்
சு. குமரசாமி நாடார் அவர்கள் குமாரனும்,

நாகை ஹிந்து மதாபிமான சங்கம் காரியதரிசி
ப. லெ. வெங்கிட்டராம சாஸ்திரிகளின்
பிரிய சிஷனும்,

தஞ்சை ஜில்லா நாடார் சங்கம்
காரியதரிசியுமான
S. K. ராமசாமி நாடார் அவர்களால்
இயற்றப்பட்டு

நாகபட்டணம்
ஜனோபகார அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

முதல் பதிப்பு 1000 காப்பிகள்.

Registered Copy Right. ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது

(1927) பிரபவ-ஸு ஆவணிமீ.

இதன் விலை] [ரூ. 0—12—0.

உ

எம வாதம்.

இந்நூல் விஷயமாய் கனவான்களால் கொடுத்த முன்னுரை அபிப்பிராயங்கள் சாற்றுக்கவிகள் இதன்டியில் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது.

FOREWORD.

The author of this brochure has been kind enough to ask me to write a brief foreword to his work. His booklet shows the working of an ingenious fancy which commingles the past and the present and weaves a modern embroidery of presentation around an ever-old and ever-new and eternally beautiful Puranic Story. His aim in the work is the aim which has always appeared to the master minds of India as the supreme aim of life Viz., the seeking and attainment of the Truth and the highest Bliss. The Story of Markandeya is sought to be belittled by some detractors but the author has given us all ample and convincing reasons showing the enduring truth and beauty and value of the story. The author has used the forms of judicial procedure in an effective way with the object of impressing the moral which he aims at expounding in a novel and modern manner. We are well aware how such a method was resorted to with power and grace in the greatest of Browning's works, "The Ring and The Book". I congratulate the author on his aim and method and wish him popular appreciation in an abundant measure.

TANJORE, }
30-7-1927. }

K. S. RAMASAMI SASTRI,
Sub-Judge, Tanjore.

I have been asked to write a word of introduction to this little book which is in the nature of an amusing phantasy woven round a well-known Puranic theme. Markandeya, young in years but mature in mind and spirit, poor in worldly wealth but rich in piety and devotion, his name is a by-word in the Hindu home as that of a youth who conquered the Fates and won over Death himself. The story has been told and retold for generations and young and old alike have wept over the impending doom of the hero and rejoiced at once over his victory aud thrilled to see the Grace and Compassion of the Lord.

But the human intellect which has grown in the habit of arraigning all things, sacred or profane, before the bar of reason has now and again put questions to itself. So men have asked-often irreverently-if the Lord was right in doing away with the Destroyer whose only fault was to try to do his duty and unerringly snatch away the soul of a man whose prescribed term of mortal life had run out. They have asked again how the Lord could abrogate a settled law and reward devotion with a renewed lease of life.

Different answers have been given that have appealed to and satisfied different tastes and temperaments, the most emphatic and unanswerable of them all being "He is the greatest of the known and the unknown and He knows best". But this much emerges beyond all controversy-Proud Yama was killed but rose again a chastened and dutiful servant of God. There lurks a moral for those who have eyes to see. Pride goes before a fall and a dedicated spirit leads to eternal life.

D

It is this old story that the author has dealt with here and presented to us in a novel form. We have before us a report of the proceedings in the Court of the Most High which came on as an aftermath of this incident. A distinguished personage is on trial along with his abettor but the procedure adopted partakes of the Civil and the Criminal; Issues are framed, witnesses are examined for the complainant, counsel on either side address the Court and indulge in the usual quibbles and hair-splitting arguments, quoting chapter and verse for the position that they take and the Judge pronounces Judgment. Needless to state, all go out of the Court well pleased-the parties, the counsel and the Judge. Opinions will differ as to the propriety of treating sacred themes in this manner. But we have no irreverent familiarities here or vulgar jokes. We respect the accused as we sympathise with the complainant in his weakness.

The author read out his manuscript to a meeting of the members of the Sundara Lodge, Theosophical Society here. We all admired the ingenuity of the author who has with such dextrous cunning dressed up an ancient theme in a modern forensic garb. I am glad that the book is now going out to a wider public.

NEGAPATAM, 18TH JULY 1927.

R. SWAMINATHAN.
High Court Vakil.

I have had the pleasure and privilege of reading through this very interesting and illuminating little volume, in which the author has portrayed and analysed

in a masterly manner the Ageless and Deathless Puranic Story of Markandeya. The story though simple in fabric is steeped in the deepest of subtleties, and has ever furnished abundant matter for reflection to the speculative mind, and the present author in his quest for the Supreme has tried in his own way to dive below and unravel the 'Unfathomable Wonder and Mystery Divine' hidden beneath this charming theme of enduring Beauty and Grace. The entire subject, with all the legal quibbles and niceties to which the theme easily lends itself, supplemented by a wealth o' detail and fancy supplied by the author's own rich erudition and imagination, is very effectively and graphically presented in this brochure in the ingenious and felicitous form of a solemn judicial proceeding which is bound to be immensely popular and impressive. I am sure this piece of work will be a very happy and valuable contribution to the ever-widening current of religious thought and will prove eminently suggestive and stimulating to all those who, in some measure at least, strive to understand the workings of the one All-Supreme God who Lives and Loves. I wish the book every success it so richly deserves.

TIRUVALUR, }
3—8—1927. }

ARTHUR THAMBI RAJ,
High Court Vakil.

பிறைசை
ஸ்ரீமான் சு. முத்துசாமி நாவலர்
இயற்றியது.

பூங்கமல மாதுமகழ் புதுமாட நிரைநாகை பொருந்திபென்றுந்
தேங்கமல முடையவெளிப் பாளையத்திற் சான்றவர்கள் திலகமான
பாங்குபெறு நற்குமர சாமியருள் தழைக்கவெகு பாவைநற்றோன்
ஓங்குபுகழ் பெறும்ராம சாமியுல குயர்மேவு மொருநூல் செய்தான்

முன்னுமுனி வரர்சித்தர் கலைவாணர் முதலானோர் மகிழ்துஞானந்
துன்னுத லிதுவென்னத் துலங்கிவள ரேமவாத மயநூலை
மின்னுநவ மணிகோர்த்து விடுத்தனபோற் செகமீது விடுத்தானம்மா
அன்னவன்றன் பொருமைமிகு திறமையெலா மெடுத்தறையுமாதோ.

இராமனாதபுரம் சமஸ்த்தானம்
வித்வகோத்ரம்
அம்மைநாதக்கவிராயர் புத்திரன்
பிச்சைக்கவிஞன்
இயற்றிய சாற்றுக்கவி.

ஆசிரிய விருத்தம்.

உல்கமதி லர்தியாய் வித்தைமுன் கருவியாய்
ஒங்குலக் கணமிலக்கியம்
உயர்வான நூலெலாங் கரைகண்ட மதியுகன்
ஒப்பிலாச்சாஸ்த்ர நிபுணன்
நிலையான சட்டங்கள் யாவுமுயர் கொண்டவளர்
நிதியுள்ள தர்மகர்த்தன்
நேரான சான்றோர்கள் மரபில்வ தரித்திட்ட
நித்யசிவ பூசைபுரிவோன்
தல்முயரு நாட்டார்கள் சங்கத்திற் காரியத்
தரிசியாயுற்றசீலன்
தார்புகழ்ந் தோங்குமர சாமிதுரை குமாரனும்
தவரர்ம சாமிகவிஞன்
சில்கலைக ளாரர்ய்ந்து ஏமவாத நூலினைச்
செப்பிட்செகமுழுவதும்
தேவஉல கமுதமோ பாவினியதோ வென
திகைத்தருந்தினர்கள்மாதோ

பெருநாழி

ஸ்ரீமான் வெ. ஆ. குமரய்ய நாடார்

அவர்கள் இயற்றியது.

எண்சீர். கழி. நெடிலடி ஆசிரிய விருத்தம்.

உண்மையளப் பரப்பிர்மத் தலைவன்முன்னின்
றுமாபதியெய் தன்மையைச்சொல் கலைவாதம்
நுண்மையினை ஞாலத்தோர் தெளியும்வண்ணம்
நான்முகமாய் விவகரிதரித்தான் நடுங்குறைதை
வண்மைபுனை பெருநாழி நாகையூரில்
மன்னவர்தங் குலவரிவு ஆக்கமான
எண்மையெலாமேந்துபுகழ் ராமசாமி
யெனும்வீர பராக்கிரமதளசிமேறே.

நாகபட்டணம் தென் இந்தியா றயில்வே
தொழிலாளர் சங்கம் மேம்பர்.
காரியேஜ் ஷிப்பர் ஷாப்பு.

ஸ்ரீமான் சி. இ. ஆறுமுகம் பிள்ளை

அவர்கள் இயற்றியது.

ஆன்றோர் மொழிதவறு தம்புவியில் நாகைவெளி
சான்றோர் குலராம சாமிசெய்நூல் —மான்றேல்
தரித்த சிவனன்பால் தரணிமிசை யோத
பொருத்தவிய லுண்டனவேயோத்து.

F



S. K. ராமசாமி நாடார்,
இயற்றியவர்.

உ

ஓம் பரப்பிரம்மணே நம:

இயமவாதம்.

பரப்பிர்ம்ம ஸ்தோத்திரம்.

அகில சராசரங்களுமே தானேயாகி
அவ்வவற்றுள் நிறையுமுயிர் தானேயாகி
புகலுமொழி தன்னுளுயிர்ப் பொருளுமாகி
பூரணமாய் நின்றிலங்கு மருளுமாகி
சகல கலைப்பிரணவமும் தானேயாகி
தனக்குவமை வேறில்லாத் தகமையாகி
இகசுகமும் பரவசமும் இலங்கா நின்ற
இணையில்லாப் பரம்பொருளை யெழிலாய் போற்றி.

முகவுரை.

இந்நூலின் கருத்தானது, இப்பிரபஞ்சத்தில் சதா தோன்றியும் அழிந்தும் சுழல் காற்றிலகப்பட்ட செத்தைபோல் உழன்று கொண்டிருக்கும் ஜீவராசிகள் அநேக தவப்பேற்றால் மானிட வாழ்க்கையை அடையவும் நேரிடுங்கால், அப்பிறவியை வீணில் செலவழித்திடாவண்ணம், மாயாப் பிறவியை வேரறுத்து விதேக முத்தியடையும் படியான மார்க்கத்தைத்தேடவேண்டியது அவசியமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அத்தகைய காரியத்தை நிறைவேற்றல் பொருட்டு, நம் முன்னோர்களாகிய பெரிய மகான்களால் அநேக சாஸ்திரங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை ஆராய்ந்தறிந்து, அதன்படி பின்பற்றி பலர் விதேக கைவல்ய மடைந்திருப்பதையும் நாம் அநேக புராணகாவிய இதிகாசங்களாலும் தெரிகிறோம். அதை வற்புறுத்தியே பத்ரகிரியார் சுவாமிகளும், "நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீ மனமே, மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை, மாமறைநூல், யேற்றுக்கிடக்கு மெழுகோடி சாஸ்திரம் என்னகண்டாய், ஆற்றில் கிடந்து துறையறியாமல் அலைகின்றையே", யென்பதாய்ச் சொல்லி யிருக்கிறார்கள். ஆனதுபற்றி நாம் சாஸ்திரங்கள் ஆராய்ச்சிசெய்ய வேண்டியது அவசியமென்பது மறுக்கஒற்பாலது அத்தகைய புராண காவியங்கள் அநேகவற்றுள், மார்க்கண்டேய புராணம் மிகவும் சிறந்ததும், உலகப் பிரசித்தமாயுள்ளவற்றினும் ஒன்று. அது விஷயமாய் முழுதார்ப் பரியத்தையும் நாம் செவ்வையாய் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டியது அவசிய

மாதவினாலும், நமது சாஸ்திர ஆராய்ச்சியிலும், ஆகம ஐதீகங்களிலும், முதிர்ச்சி யடையாத, புறமதஸ்தர்கள், இம்மார்க்கண்டேயர் விஷயமாய் பரமசிவன் செய்தது நியாய விரோதமான செய்கை யென்றும், அத்தகைய குணமுடையோருக்குக் கடவுள் யென்னும் பெயர் கொடுக்கத் தகாதென்றும், அத்தகைய கடவுளை வழிபட்டுத் தழுவும் மதமும் பொய்மதமென்றும், இன்னும்பலவாராய் ஞானசூனியர் கூட்டத்தில் பிரசங்கிப்பது மதியீனமென்பதை அன்னவர்கள் தாங்களே உணர்தல் பொருட்டும், மற்றும் இதைக் கண்ணுறும் ஞானவான்கள் பரமசிவனானவர் மானிடவர்க்கத்தைப்போல், நியாயம், அநியாயம் முதலியவற்றின் சம்மந்தப்படாத அருள் செய்கையே உருவமாய் ஆராதிக்கப்படும் கடவுள் என்பதையும், அவர் செய்தவைகளெல்லாம் தீர விசாரித் துணர்வோர்களுக்கு நியாயமானவைகளென்று விளங்கக்கூடியவை யென்றும், அஞ்ஞானிகளின் தவறுதலான கருதுதல்களுக்கு கடவுளும் சாஸ்திரங்களும், புராண இதிகாசங்களும், கட்டுப்பட்டதல்ல யென்பதை யாவரும் எளிதில் உணருமாறு, வாசக நடையிலும், விவகார திசையிலும் "இயமவாதம்" என்னும் இக்காவியத்தை இயற்றலானேன். இதில் சொற் குற்றம், பொருள் குற்றம் முதலிய குற்றங்கள் எற்படின் அங்கீகரிக்கும்படியாய் கோருகிறேன்.

S. K. ராமசாமி நாடார்,

இயற்றியவர்.

உ

ஓம்பரப்பிரம்மணே நம:

இயமவாதம்.

பிர்மத்தை இயமன் ஸ்துதித்தல்.

சோதியே சுடரே எந்தன் துன்பந்தான் ஏதோ கேளீர்
பாதியாம் மதியைச்சூடி பகர்சிவன் நியாயமின்றி
வேதியர் குலத்துதித்த மிருகண்டர் சேயன் தன்பால்
ஆதியாய்க் கொண்டநேச அன்பினால் என்மேல் சீறி
வேதனைப் படவுதைத்து வெய்யதோர் சூலந்தன்னால்
மோதியே கொன்றுமீண்டு முயிர்ப்பித்தென் தொழிலைச் செய்ய
சேதியை விளம்பினாரித் தீத்தொழில் நியாயந் தானோ
கோதிலா தெனக்கிநீதி கூறுமெய்ப் பொருளே போற்றி.

பிறாது.

பரப்பிர்ம்ம ராஜ்ஜியம் பிரமதேசம் டிஸ்டிரிக்ட்,
கனம் ஜஸ்டிஸ் சதாசிவம் அவர்கள் சமுகத்திற்கு,
துவாபரயுகம் 2017ளு வைகாசிமீ 1உ பயில் 43நெ. கேஸ்.

வாதி.

தெய்வலோகத்தைச் சேர்ந்த எமபுரம், சம்ஹாரத் தொழில்நடத்தும் இயமதர்ம ரஜர்.

எதிரிகள்.

ஈச்வர ராஜ்ஜியம் ஸ்ரீ கைலங்கிரியிலிருக்கும் சம்ஹார கர்த்தர் பரமசிவன் 1.

மானுஷ்ய ராஜ்ஜியம் திருக்கோயில்கள்தோறும் தொண்டூழியம் செய்யப்பட்டவரான மிருகண்ட மகாரிஷியின் புத்திரன் மார்க்கண்டேயர் 2

வியாச்சிய அகவல்.

1. ஆதி துவாபர யுகம்
தொகையீ ராயிரத்தி
பதினேழாம் வருஷம்
பண்பு சித்திரையில்

2. நாலாந் தேதி
நானும்என் ஆளொடு
பூலோ கத்தில்
பொருப்புட னிருக்க

3. பவமிலாக் கடையூர்
பண்பு க்ஷேத்திரமே
சிவதொண்டு புரியும்
சீருள்ள ரெண்டாம்

4. எதிரியாம் மார்க்கண்
டேயருக்கு மூனம்
பதிமுத லெதிரி
பரமேச் சுரனால்

5. ஆயிசு பதினா
றுகவே கொடுபட
யேமரங் கணக்கு
ரேர்சித்ர குப்தர்

6. கணக்கினி லிருந்திடுங்
காரணப் படியே
பிணக்கு வாமல்
பேர்பிச காமல்

7. நாளது பார்த்து
நான் தவறு து
கோளது அனுகா
குறித்திடும் ரெண்டாம்

8. எதிரியாம் மார்க்கண்
டேயரின் உயிரை
வதைசெய்ய கானே
வளமையாய்ச் சென்றேன்

9. என்வரவு தனை
ரெண்டாம் எதிரி
கண்ணுற நோக்கி
கணபயத் தோடு

10. சேருள்ள அமூர்த
லிங்கத்தையே கை
யாருறத் தழுவ
யானுமே பாசம்

11. நீதியாய்ப் போட
நேருள்ள லிங்கம்
மீதுபட்ட தெனும்
விகர்ப்பத்தி னாலோ

13. மூலமாய்த் தோன்றி
முச்சூல மதால்
சாலமாய்க் குத்தி
தாளா லுதைத்து

14. கொன்றனர் பின்னே
குவலய மதனில்
சம்ஹாரம் மது
சரிவர புரிய

15. நம்பொது வான
நமனிலை யென்றே
கொன்றது தப்பு
கொடுபாவம் தனை

16. என்றுமே சாரும்
என்றெண்ண மதோ
கன்றியே மனது
• காரணப் படியே

17, மறுபடி என்னை
மதியுட னெழுப்பி
சரிவர என்னை
சம்ஹா ரம்மது

18. செய்யென வென்று
செப்பினர் ஆனால்
அய்யனாகிய ஒண்
ணாவது எதிரி

19. ஆடரின் படியே
அணியுத் யோகம்
நாடுமன்னவர் கீழ்
கடப்போ ரானாலும்

20. தப்புள விஷயம்
சாற்றுவ தென்றால்
நட்புடன் கேட்க
நற்சட்ட மில்லை

21. அதனால் மார்க்கண்
டய்யர் தனக்கு
ஒருபதி னாறு
உள்ளது வயதென

22. வாக்களித் ததுபோல்
வளமையாய் நானே
தாக்குடன் செல்ல
தடுத்தவ ருயிரை

23. கார்த்தது குற்றம்
கண தெய்வலோகம்
சீர்பினல் கோடு
செக்ஷனும் நாத்தி

24. எழுபத்தியாருக்
கிசைந்தது குற்றம்
பழுதான மதியால்
படஎனைச் செய்து

25. எழுப்பின தாலே
யியல்பான நஷ்டம்
வழுவான தாலே
மாணில மறிய

26. தேவ உலகம்
சீவில் புரஸிஜர்
மாவள கோர்ட்டில்
வளர்துகை அஞ்சு

27. பத்து நான்காவது
பார் செக்ஷன்படி
குற்றமா கிறது
கோர்ட்டா ரவர்கள்

28. யியல்பொடு நூத்தி
எழுபத்தா றுவது
அயன்செக் ஷன்படி
ஆரணயே தண்டனை

29. செய்யும் படிக்கும்
சீர்மார்க் கண்டனை
வையக மகிழ் உயிர்
வாங்கெனக் குத்தரம்

30. தந்து நான் கோர்ட்டில்
சாங்கிஷன் சிவன் மேல்
நந்தாது கொடுக்க
நான் பிரார்த் திக்கிறேன்

31. நான்கை எழுத்து
நாணில மறிய
தான் யெம தர்மன்
தனி நாட்டி னேனே.

வியாஜ்ஜியம்.

(வசனம்)

துவாபரயுகம் 2017ம் வருஷம் சித்திரை மாதம் 4ந்தேதி நான் என் வேலைக்காரர்களோடு பூலோகத்தில் திருக்கடையூரென்னும் க்ஷேத்திரத்தில் சிவதொண்டு புரியும் 2ம் எதிரியாகிய மார்க்கண்டேயருக்கு ஏற்கனவே 1வது எதிரியாகிய பரமசிவனால் ஆயிசு பதினாறு (16) என்பதாய்க் கொடுபட்டு அதின்யடியே என் கணக்கப்பிள்ளை சித்திரக் குப்தர் கணக்கிலும் ஏற்பட்டு, நான் ஷை 2ம் எதிரியின் ஆயிசு முடிவானதால், அவர் உயிரை வாங்கும்படிச் சென்றேன். அப்போது 2வது எதிரி எனக்குப் பயந்து லிங்க வடிவாய் அமைந்துள்ள அமுர்த கடேச்வரரை கட்டிப்பிடித்துக்கொண்டார். அப்போது நான் பாசத்தை போட்டு யிழுக்க, அப்பாசம் சிவலிங்கத்தின் பேரிலும் பட்டதென்ற ஆத்திரத்தினலோ, அல்லது தனது தொண்டன் என்பதாய்ப் பரிந்து விசனத்தோடோ பரமசிவத்திற்குக் கோபம பிறந்து அந்த லிங்கத்தின் மூலமாய் சூலாயுதபாணியாய் கிளம்பி, என்னை உதைத்து சூலத்தால் குத்திக்கொன்ருர். பிறகு சம்ஹாரத்தொழில் நடத்த வேறு ஆள் நியமிக்க சக்தியற்ருே, அல்லது என்னை அக்கிரமமாய் கொன்ற தப்பிதம் தன்னைச் சாருமென்ருே, மறுபடியும் என்னை எழுப்பி சம்ஹாரத் தொழில் புரியும்படி ஆக்யாபிக்கின்ருர். ஆனல் 1வது எதிரியின் ஆர்டர்படியே உத்தியோக முறைமையில் கீழ்படிந்து நடக்கக் கடமைப்பட்டவனானலும் தப்பான காரியம் செய்யும்படி ஆக்யாபித்தால் அதன்படி நடக்க சட்ட ஆதாரமில்லை.

1வது எதிரியால் 2வது எதிரிக்கு வயது 16 என்று ஆயிசு நிர்ணயிக்கப்பட்டு அதின்படியே நான் அவரை வதைக்க, அதைத் தடுத்து அவர் உயிரைக் காப்பாற்றி யிருக்கின்ருர். இதானது தெய்வலோகம் பினல்கோடு 176வது செக்ஷன்படி குற்றமாகிறது. மேலும் என்னைக் கொன்று மறுபடியும் உயிர்ப்பித்து எனக்கு மானநஷ்டம் உண்டுபண்ணியிருக்கிருர். இதானது தெய்வலோகம் ஸிவில் புரஸீஜர் கோடு 54வது செக்ஷன்படி குற்றமாகிறது.

ஆகையால் எஜமானவர்கள் தயவுசெய்து அடியில்கண்ட என் தரப்பு சாக்ஷிகளை விசாரணை செய்து 176வது செக்ஷன்படி என்னைக் கொன்ற வாதியை தண்டனை செய்யும்படிக்கும் ஆயிசு நிர்ணயம் கழித்து 1வது எதிரியின் சகாயத்தால் உயிருடன் இருக்கும் 2ம் எதிரி மார்க்கண்டேயரை அதம் செய்யும்படி உத்திரவு செய்யும்படிக்கும் சட்ட வரம்புகடக்காமல் நடந்த என்னையே உதைத்துக் கொன்று மறுபடியும் எழுப்பி எனக்கு மான நஷ்டம் உண்டாக்கியிருக்கும் பரமசிவன் பேரில் நான் தகுந்த கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்வதற்கு சாங்ஷன் கொடுக்கும்படிக்கும் பிரார்த்திக்கிறேன்.

(கையெழுத்து) இயமன்.

வாதி சாக்ஷிகள்.

1. காலன்.
2. பூமாதேவி.
3. சித்திரகுப்தர்.

உறுதி மொழி.

வாதி இயமதர்மறஜர் பிரமாணத்தின்பேரில் எழுதி வைத்தது. பிராது என்னால் கொடுக்கப்பட்டது. இதில் கண்ட சங்கதி முழுதும் உண்மை என்று பிரமாணமாய்ச் சொல்லுகிறேன்.

(கையெழுத்து) இயமன்.

கோர்ட் நடவடிக்கை.

துவாபரயுகம் 2017ம் வருஷம் வைகாசி மாதம் 11ந் தேதி ஈரங்கி குறிப்பிட்டு சம்மன் அனுப்பி உபயகக்ஷிக்காரர்களும் அடியில் கண்ட விபரப்படி ஆஜரானார்கள்.

ஆஜரான விபரம்.

வாதி—இயம தர்மறுஜர்.

வாதி வக்கீல்—தூருவாச மகாரிஷி.

1வது எதிரி—பரமசிவன்.

1வது எதிரி வக்கீல்—வேதவியாசர்.

2வது எதிரி—மார்க்கண்டேயர்.

2வது எதிரி வக்கீல்—வஸிஷ்டர்.

வாதி சாக்ஷிகள்.

1. காலன்.
2. பூமாதேவி.
3. சித்திரகுப்தர்.

விசாரணை.

வாதி தரப்பு 1வது சாக்ஷி காலன் வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வ சாக்ஷியாய் நான் சொல்லுவதெல்லாம் உண்மை.

வாதி வக்கீல் வினவும், 1ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). வாதி எதிரிகளைத் தெரியுமா ?
(விடை). தெரியும்.

2. (வினு). நீர் யார் ?
(விடை). வாதியின் வேலைக்காரன்.

3. (வினு). உமக்கு தொழில் யாது ?
(விடை). வாதியின் உத்திரவுப்படி ஜீவராசிகளின் உயிரை வாங்கும் தொழில்.

4. (வினு). ஆயிசு முடிந்த பிறகு ஜீவராசிகளின் உயிரை வதை செய்வீரா ? அல்லது முன் பின்னுக உயிரை வதை செய்வீரா ?
(விடை). ஆயசு முடிந்ததென்றும் முடியவில்லை என்றும் எனக்குத் தெரியாது. யார் யார் உயிரை வாங்கும்படி எனது எஜமான் உத்திரவாகிறதோ அவ் வுயிர்களை மட்டும்தான் வதை செய்வேன்.

5. (வினு). உயிரை வாங்குவதற்கு உன் எஜமான் அவர் இஷ்டம் போல்சொல்லுவாரா ? அல்லது அதற்கு கணக்கு உன் யெஜமானனிட மிருக்கிறதா ?
(விடை). அவரிஷ்டம்போல் சொல்லுகிறதில்லை. கணக்கும் அவர் வசம் யிருக்கவில்லை. இயமபுரம் கணக்கப் பிள்ளை சித்திரகுப்தர் ஆயசு முடிந்த ஜீவராசிகளின் கணக்கைப் பார்த்து அவைகளை என் யெஜமானனிடம் அனுப்புவார். அந்த ஜீவராசிகளின் உயிரை வாங்கும்படி எனக்கு ஆர்டர் செய்வார். அதன்படித்தான் நான் உயிரை வாங்குவேன்.

6. (வினு). இந்த 2ம் பிரதிவாதியின் உயிரை வாங்கும்படி உனக்கு ஆர்டர் செய்தாரோ ?

(விடை). செய்தார்.

7. (வினு). அது எப்போது ?

(விடை). சித்திரை மாதம் 4ந் தேதி.

8. (வினு). அதின்படி நீர் உயிரை வாங்கினீரா ?

(விடை). இல்லை.

9. (வினு). ஏன் வாங்கவில்லை ?

(விடை). வாங்கும்படி சென்றேன். அவர் அச்சமயம் திருக்கடையூரில் அமுர்தகடேச்வரஸ்வாமி ஆலயத்தில் சிவபூஜை செய்து கொண்டிருந்தார். நான் கூப்பிட்டும் வரமாட்டேனென்றார். ஈசுவரனுடைய முன்னிலையில் சிவத்தொண்டர் உயிரை வாங்குவதற்கு எனக்கு அதிகாரமில்லாததினால் என் எஜமானனிடத்தில் வந்துதெரிவித்துவிட்டேன்.

10. (வினு).. பிறகு அவர் என்ன செய்தார் ?

(விடை). அவர் என்னையும் மற்ற பூதகணங்களையும் அழைத்துக்கொண்டு மார்க்கண்டேயர் உயிரை வாங்குவதற்கு திருக்கடையூரில் அமுர்தகடேச்வரரை பூசைசெய்து கொண்டிருக்கும் சமயம் அவரைக் கண்டு கூப்பிட்டார். அவர் வரமாட்டேன் என்று லிங்காகாரமாய் விளங்கும் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டார். அப்போது எனது யெஜமான் கோபங்கொண்டு தனது பாசத்தை வீசினர். அப்பாசம் மார்க்கண்டேயர் மீதும், சிவலிங்கத்தின் மீதும் பட்டது. உடனே அந்த லிங்கத்தினின்று ருத்திரமூர்த்தி கோபாவேசமாய் பிரசன்னமாகி என் யெஜமானனை உதைத்து சூலத்தால் குத்திக் கொன்றார்.

11. (வினு). பிறகு நீங்கள் யென்ன செய்தீர்கள் ?

(விடை). நாங்கள் திரும்பி வந்துவிட்டோம்.

12. (வினு). பிறகு உன் எஜமானன் எப்படிஉயிருடன் எழும்பினுர்?

(விடை). பூமாதேவியானவள் பூமிபாரம் பொருக்காமல் பிரம்ம தேவனிடம் முறையிட அவர் மகா விஷ்ணு விடத்தில் நடந்த சங்கதிகளைச் சொல்ல அவர்கள் மூவரும் பரமசிவனை வேண்டிக் கொண்டதின் பேரில் அவர் என் யெஜமானனை எழுப்பினர்.

1ம் எதிரி வக்கீல் கிருசும், 1ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). நீர் போய் முதலில் மார்க்கண்டேயரை என்ன சொல்லி கூப்பிட்டீர்?

(விடை). உமக்கு ஆயசு முடிந்துவிட்டது, எனது எஜமானன் இயம தர்மருஜா் உம்மை யழைத்து வரும்படி சொன்னுரென்று கூப்பிட்டேன்.

2. (வினு). அதற்கு அவர் என்ன சொன்னுர்?

(விடை). தனக்கு ஆயசு முடியவில்லை யென்றும், அதனுல் "நான் வரமாட்டேனென்று உன் யெஜமான னிடம் சொல்" என்று பதில் சொன்னுர்.

3. (வினு). நீர் என் அச்சமயம் அவர் உயிரை வாங்கவில்லை?

(விடை). சிவபூஜை நேரத்தில் உயிரை வாங்கப்படாது, பாசம் இயமதண்டம் உபயோகிக்கவும் கூடாதென்று இயமலோக சட்டம் 28வது பிரிவில் சொல்லி யிருப்பதாலும், அந்த மார்க்கண்டேயரும் கொஞ்ச நேரங்கூட*ஒச்சல் ஒழிவில்லாமல் சதா சிவபூஜை செய்துகொண்டிருந்ததாலும் உயிரை வாங்காமல் வந்துவிட்டேன்.

2ம் எதிரி வக்கீல் கிருசும், 1ம் சாக்ஷி விடையும்,

1. (வினு). நீர் மார்க்கண்டேயருக்கு ஆயுசு முடிந்து விட்டதா என்று இயமபுரம் கணக்கைப் பார்த்தீரா?

(விடை). நான் கணக்கைப் பார்க்கும் வழக்கம் கிடையாது. இயமபுரம் கணக்கு நகல் சித்திரகுப்தரால் இயம தர்மருஜாவுக்கு அனுப்பப்படும். அதன்படி உயிரை வாங்கும்படி எனக்கு இந்த வாதி ஆர்டர் செய்வார்.

2. (வினு). நீர் மார்க்கண்டேயரை கூப்பிட்டும் அவர் தனக்கு இன்னம் ஆயசு முடியவில்லே யென்றும் தான் வரமாட்டேனென்றும் உன் யெஜமானனிடம் தெரிவிக்கும்படி சொன்னரே, நீர் அவ்விதமே உன் யெஜமானனிடம் தெரிவித்தீரா?

(விடை). தெரிவித்தேன்.

3. (வினு). பிறகு அவராவது மார்க்கண்டேயர் ஆயசு முடிவு காலம் சரிதானவென்று இயமபுரம் கணக்கைப் பார்த்தாரா?

(விடை). இல்லே.

4. (வினு). ஏன்?

(விடை). சித்திரகுப்தர் கணக்கு சரியாயிருக்கும் என்ற நம்பிக்கையினல்தான்.

5. (வினு). சித்திரகுப்சர் மார்க்கண்டேயர் ஆயிசைப்பற்றி எழுதி அனுப்பியது சரிதானவென்பதும் சரியல்லவென்பதும் உனது யெஜமானனுக்கு தெரியுமா?

(விடை). தெரியாது.

6. (வினு). இயமபுரம் சம்பந்தமான சகல சுதந்தரமும் அதிகாரமுமுடையவர் யார்?

(விடை). இயம தர்மருஜர்.

7. (வினு). சித்திரகுப்தர் உமது யெஜமானனுக்குக் கீழ்ப்பட்டவரா மேல்பட்டவரா?

(விடை), அவருக்குக் கீழ்ப்பட்ட கணக்கப்பிள்ளேதான்.

8. (வினு). அவர் செய்யும் தப்பிதங்களே கண்டிப்பவரும் அதற்கு ஜவாப்தாரியும் உமது யெஜமான் தானே?

(விடை). ஆம்.

கோர்ட்டார் வினுவும், 1ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). நீர் தெரிவித்த வாக்குமூலம் வாசிக்கக் கேட்டீரா?

(விடை). கேட்டேன்.

2. (வினு). கையெழுத்துப் போடும்.

(கையெழுத்து) காலன்.

வாதி பக்கம் 2ம் சாக்ஷி சித்திரகுப்தர் வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வ சாக்ஷியாய் நான் சொல்லுவதெல்லாம் உண்மை.

வாதி வக்கீல் வினவும், 2ம் சாக்ஷி விடையும்.

1. (வினா). வாதி எதிரிகளைத் தெரியுமா ?
(விடை). தெரியும்.

2 (வினா). நீர் யார் ?
(விடை). இயமபுரம் கணக்கப்பிள்ளை.

3. (வினா). உமது தொழில் யாது?
(விடை). பூலோகத்தில் ஜீவருசிகளின் ஜெனனங்களை ரிக்கார்டு செய்வதும் அவைகளின் பிராரத்துவப்படி அவைகளுக்கு நேரிடும் சுகதுக்கங்களைப்பதிந்து அதன்படி நடத்த அது சம்பந்தப்பட்ட திக்குப் பாலகர்களுக்கும் நவக்கிரகங்களுக்கும்யாதாஸ்து அனுப்பி அவைகளை நடைபெறச் செய்வதும், ஆயுசு நிர்ணயப்படி ஆயுசுமுடிந்த ஜிவருசிகளின் உயிரைவதம் செய்யும்படி உடனுக் குடன் இயமதர்மருஜருக்கு யாதாஸ்து அனுப்பிஅதன்படி நடைபெறச் செய்வதுந்தான்.

4. (வினா). 2ம் எதிரியின் ஜெனனம் யெப்போது ?
(விடை). ரிகார்டு பார்த்துச் சொல்லவேணும்.

5. (வினா). உமக்கு அனுப்பப்பட்ட சம்மனில் ஷை ரிகார்டுகளை கொண்டு வரும்படி ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறதா ?
(விடை). ஆம்.

6. (வினா). அதன்படி நீர் கொண்டுவந்திருக்கிறீரா ?
(விடை). இதோ கொண்டுவந்திருக்கிறேன்.

7. (வினா). ரிகார்டைப் பார்த்துச் சொல்லும் ?
(விடை). துவாபரயுகம் 2001ம் வருஷம் சித்திரை மாதம் 4ந் தேதி சூரிய உதயத்திற்கு.

8. (வினு). அவருக்கு எத்தனை வயது வரையில் பூலோகத்தில் ஆயசு ஏற்பட்டது ?
(விடை). ஈரெட்டு, பதினறு வயது.

9. (வினு). வயது யாரால் கொடுக்கப்பட்டது ?
(விடை). 1ம் எதிரியாகிய பரமசிவனுல்.

10. (வினு). இமதர்ம ராஜருக்கு மார்க்கண்டேயர் உயிரை வதம் செய்யும்படியாய் சீர்யாதாஸ்து அனுப்பினதுண்டா ?
(விடை). அனுப்பியிருக்கிறேன்.

11. (வினு). அது எப்போது ?
(விடை). அவருக்கு ஏர்ப்பட்ட வயது பதினறும் முடிந்த தினமாகிய துவாபரயுகம் 2017ம் வருஷம் சித்திரை மாதம் 4ந் தேதி.

12. (வினு). அதன்படி இயமதர்மராஜர் மார்க்கண்டேயர் உயிரை வாங்கிவிட்டாரா ?
(விடை) இல்லை.

13. (வினு). உயிரை வாங்கவில்லையென்பது உமக்கு எப்படித் தெரிகிறது ?
(விடை) மார்க்கண்டேயர் உயிரை என் யாதாஸ்துப்படி வாதிஅதம் செய்திருந்தால் உடனே எனக்கு அது விபரம் தெரிவித்து யாதாஸ்து வந்திருக்கும். அவ்விதம் இன்னம் வாராததினுல் இன்னம் மார்க்கண்டேயர் உயிருடன் யிருப்பதாய்த்தெரிகிறது.

14. (வினு). உமது கணக்கில் மார்க்கண்டேயர் இன்னம் உயிருடன் இருக்கிறதாக எழுதப்பட்டிருக்கிறதா ? இறந்துவிட்டதாக எழுதப்பட்டிருக்கிறதா ?
(விடை). உயிருடனிருப்பதாகத்தான் தெரிகிறது. இறந்துவிட்டதாய் எழுதப்படவில்லை.

1ம் எதிரி வக்கீல் கிருசும், 2ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). இயமபுரம் கணக்கு யாரிடத்திலிருக்கப்பட்டது ?
(விடை). என்னிடத்தில் தான்.

2. (வினு). உமது கணக்கில் மார்க்கண்டேயர் பேரேடு எத்த
ளும் பக்கம் ?

(விடை). துவாபரயுகம் 4வது புஸ்தகம் 7ம் வாலியம் 75வது
பக்கம்.

3. (வினு). உமது யெஜமான் இயமதர்மறுஜர் பேரேடு எத்த
ளும் பக்கம் ?

(விடை). அட்டவணைப் பார்த்துக் காண்பிக்கிறேன்.

4. (கோர்ட்டார்). எடுத்துச் சொல்லும்.

(விடை). திரேதாயுகம், 2வது புஸ்தகம், 3வது வாலியம் 8ம்
பக்கம்.

5. (வினு). அவருக்கு வயது எத்தனே ?

(விடை). 1 சதுர் யுகம்.

6. (வினு). அப்படிக்கிருக்க இடையில் 1ம் எதிரியால் அவர் இற
ந்து போகும்படி நேரிட்டதற்கு யது காரணம்?

(விடை). அவருக்கு துவாபரயுகம் 2017ம் வருஷம் சித்திரை
மாதம் 4ந்தேதியில் மூன்றே முக்கால் நாழிகை
கண்டம் யேற்பட்டிருக்கிறது. அதலு் பரமசிவ
னுல் வதம் செய்யப்பட்டு பிறகு அவாலேயே
எழுப்பிக் கொடுக்கும் படிக்கும் விதி யேற்பட்டி
ருக்கிறது. அதன்படியும் முடிந்துமிருக்கிறது.

7. (வினு). இயமதர்மறுஜர் பரமசிவனுடைய கட்டளைப்படி சம்
ஹாரத்தொழில் செய்பவர் தானே ?

(விடை). ஆம்.

2ம் எதிரி வக்கீல் கிருஸாம், 2ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). ஆயுசு முடிந்த ஜீவருசிகளை வதம் செய்யும்படி நீ
கொடுக்கும் யாதாஸ்துப்படிதான் இயமதர்மறுஜ
வதம் செய்வாரா ? அல்லது உமது கணக்கையும்
பார்த்து சோதித்து பிறகு வதம் செய்வாரா ?

(விடை). என்னுடைய யாதாஸ்துப்படித் தான் உயிரை வாங்கு
வாரே யொழிய கணக்கைப் பரிசோதனை செய்து
பிறகு அதம் செய்கிற வழக்கமில்லை.

2. (வினு). மார்க்கண்டேயரை அதம் செய்யும்படி நீர் இயமதர்ம ராஜருக்கு யாதாஸ்து யனுப்பின பிறகு அவர் எப்போதாவது வந்து உமது கணக்கை பரிசோதனை செய்தாரா?

(விடை). இல்லை.

3. (வினு). மார்க்கண்டேயருக்கு பரமசிவனுல் கொடுக்கப்பட்ட வயது எத்தனை?

(விடை). ஈரெட்டு, பதினறு வயது.

4. (வினு). உமது கணக்கில் மார்க்கண்டேயர் ஆயுசு "ஈரெட்டு" யென்று யெழுதியிருக்கிறீரா? "பதினறு" என்று எழுதியிருக்கிறீரா?

(விடை). "ஈரெட்டு" வயது என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது.

5. (வினு). ஈரெட்டு என்பதற்கு அர்த்தம் என்ன?

(விடை). பதினறு என்று அர்த்தம்.

6. (வினு). அதற்கு வேறு அர்த்தம் உண்டா?

(விடை). "நிச்சயமில்லாதது" என்று ஓர் அர்த்தமும் உண்டு.

7. (வினு). அப்படியிருக்க நீர் எந்த அர்த்தங்கொண்டு யாதாஸ்து எழுதினீர்?

(விடை). பதினறு என்ற அர்த்தங்கொண்டுதான் பதினருவது வயது சென்றவுடன் யாதாஸ்து எழுதினேன்.

8. (வினு). நீர் எழுதிய யாதாஸ்துக்கு நகல் இருக்கிறதா?

(விடை). இருக்கிறது.

9. (வினு). எடுத்து வாசித்துச் சொல்லும் ?

(விடை). ம-ா-ஸ்ரீ மகிபனும் இயமதர்மராஜ ராவர்கள் சமூகம் வணங்கியே இயமபுரம் கணக்கனும் சித்திராபுத்திரர் எழுதும் நிரூபம் பூதளில் திருக்கடையூர் தில் தற்போது புகழ்கின்ற சிவபூஜை செய் புண்யனும் மிருகண்ட மாரிஷி தனக்குமே புதல்வனு யவதரித்த புத்திர சிகாமணி மார்க்கண்டர் தனக்குமே புகழ் பரமசிவன் விதித்த ஈரெட்டு ஆயுசு யின்றுடு சரிவா யியல்பாய் முடிந்தவதனுல் இதுவிபர மறியவே இதமாய் விடுத்தனன் இவ்வோலை தங்களுக்கு இன்பமாய் யேற்றுமே எதிர்சேதி தாக்கலது எழுதுவீர் தர்ம அரசே.

துவாபரயுகம்
2017 வருஷம்
சித்திரை மாதம் 4ந்தேதி

(ஒப்பம்) சித்திரகுப்தர்

(எமபுரம் கணக்கு)

10 (வினு). சகல ஜீவராசிகளின் ஜனனமரண விருத்தாந்தங்களை நீர் எப்படி நடந்த அதே நோத்தில் எழுதுவீர் ?

(விடை). அப்படி யெழுதக்கூடிய தெய்வீக சக்தி எனக்கு எற்பட்டிருக்கிறது.

கோர்ட்டார் வினவும் 2ம் சாக்ஷி விடையும்.

(கோர்ட்டார்). நீர் தெரிவித்த வாக்குமூலம் வாசிக்கக்கேட்டீரா ?

(விடை). கேட்டேன்.

(கோர்ட்டார்). சரிதானு ?

(விடை). சரிதான்.

(கோர்ட்டார்). கையெழுத்துப்போடும்.

(கையெழுத்து) சித்திரகுப்தர்.

வாதி பக்கம் 3ம் சாக்ஷி பூமாதேவி வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வ சாக்ஷியாய் நான் சொல்லுவதெல்லாம் உண்மை.

வாதி வக்கீல் வினவும் 3ம் சாக்ஷி விடையும்

1. (வினு). வாதி எதிரிகளைத் தெரியுமா ?

(விடை). தெரியும்.

2. (வினா). நீர் யார் ?

(விடை). நான் பூமி பாரத்தை தெய்வீக சக்தியால் சுமந்து எப்போதும் எவ்விடத்திலு மிருக்கப்பட்டவள்.

3. (வினா). இயம தர்மராஜரை பரமசிவன் உதைத்துக்கொன்றது தெரியுமா ?

(விடை). தெரியும்.

4. (வினா). அது எப்போது ?

(விடை). சித்திரைமீ 4உ

5. (வினா). எதற்காக உதைத்துக் கொன்றார் ?

(விடை). பூலோகத்தின்கண் உள்ள திருக்கடையூ ரென்னும் சிவக்ஷேத்திரத்தில் சிவலிங்க பூஜை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயருக்கு வயது பதினாறும் சென்று விதி முடிந்து விட்டதென்று இயமதர்ம ராஜர் மார்க்கண்டேயரைக் கூப்பிட்டார். அவர் தனக்கு இன்னும் ஆயிசு முடியவில்லையென்றும் வரமாட்டேனென்றும் சொன்னார். உடனே இயம தர்மராஜருக்கு கோபம் பிறந்து எமபாசத்தை வீச எத்தனிக்க, உடனே மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டார். பிறகு இயம தர்மராஜர் பாசத்தை வீசினார். அப்பாசம் மார்க்கண்டேயர் மீதும், அச்சிவலிங்கத்தின் மீதும், பட்டது. உடனே அச்சிவலிங்கத்திலிருந்து ருத்திரமூர்த்தி சூலாயுதபாணியாய் பிரசன்னமாகி இயமனை உதைத்து சூலத்தால் குத்திக் கொன்றார்.

6. (வினா). பிறகு எவ்விதம் இயமதர்மராஜர் உயிர்த்தெழுந்தார் ?

(விடை). நான் பிர்ம்மதேவரிடத்தில் பூபாரம் சுமக்க முடியவில்லையென்று முறையிட, அவரும் மகாவிஷ்ணுவிடத்தில் கலந்து யோசித்து நாங்கள் மூவரும் பரமசிவனைக்கண்டு இயமதர்மராஜரை எழுப்பும்படியாய் வேண்டினோம். அவரும் உடனே எழுப்பி மறுபடியும் சம்ஹார த் தொழில் செய்யும்படி அவருக்கு ஆக்ஞாபித்தார்.

1ம் எதிரி வக்கீல் கிராசும், 3ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). சிவபூஜைசெய்யும் நேரத்தில் சிவபக்தர்கள்மீது பாசம் வீசலாமா?

(விடை). இயமபுரம் சட்டப்படி இயம பாசம்,எமதண்டம்இவை களை உபயோகிக்கக்கூடாது என்று தெரிகிறது.

2. (வினு). இயமதர்மராஜர் பாசம் வீசும்போது மார்க்கண்டேயர் பூசை கலைந்து நின்ருரா? பூசைசெய்து கொண்டு தானிருந்தாரா?

(விடை). ஒருஇமை நேரங்கூட பூசை கலையாமல் தான் நின்ருர்.

2ம் எதிரி வக்கீல் கிராசும், 3ம் சாக்ஷி விடையும்.

1. (வினு). இயமதர்மராஜரே முதலில் மார்க்கண்டேயரை வதை செய்ய வந்தாரா? அல்லது வேறு யாராவது வந்தாரா?

(விடை). இயமதர்மராஜருடைய வேலைக்காரனுன காலன் யென்பவன் முதலில் வந்தான்.

2. (வினு). வந்து என்ன செய்தான்?

(விடை). மார்க்கண்டேயர் சிவபூசையில் இருக்கையில் உனக்கு ஆயசு முடிந்துவிட்டது, இயமதர்மராஜர் உம்மை யழைத்து வரச்சொன்ஞர் உடனேவரவேண்டும், வராவிட்டால் பாசத்தை வீசி சூலத்தால் குத்து வேன் என்று பயமுறுத்திஞன், அதற்கு மார்க் கணடேயர் எனக்கு ஆயசு இன்னும் முடியவில்லை நான் வரமாட்டேனென்று, சொல் என்று சொன் ஞர், உடனே அவன் போய்விட்டான்.

4. (வினு). என் மார்க்மண்டேயர் உயிரை வாங்காமல் திரும்பி போய்விட்டான்?

(விடை). சிவபூசையி விருக்கையில் பாசம் உபயோகப்படுத் திஞல் இயமபுரம் சட்டத்திற்கு விரோதமாகு மென றும், மார்க்கண்டேயர் சமீபத்தில் செல்ல அவருடைய அகோர தபோபலத்தால் ஏற்பட் டிருந்த ஜுவாலையானது இடங்கொடுக்காம லிருந்ததாலும், திரும்பிப்போய் விட்டான்.

4. (வினு) இயமதர்மராஜர் வந்து மார்க்கண்டேயரைக் கூப்பிட்ட காலத்திலும் அவர் தனக்கு இன்னும் ஆயசு முடியவில்லே யென்று சொன்னதுண்டா ?

(விடை), சொன்னதுண்டு.

5. (வினு). 1ம் எதிரி கொடுத்த வரத்தின் படியே நடப்பவரா அல்லது அதற்கு மாறுதலாக நடக்கப்பட்டவரா?

(விடை). இதுவரையில் கொடுத்த வரத்தின்படியே நடந்து வந்திருக்கிருர், ஆனுல் இப்போது மார்க்கண்டேயர் விஷயமாய் சற்று மாறுதலாய் நடந்திருக்கிறதாக தெரிகிறது.

6 (வினு) மார்க்கண்டேயர் தெய்வ பக்தி உள்ளவர்தாஞ ?

(விடை). உள்ளவர்தான்.

(கோர்ட்டார்). நீர்தெரிவித்த வாக்குமூலம் வாசிக்கக் கேட்டீரா?

(விடை). கேட்டேன்.

(கோர்ட்டார்). சரிதாஞ ?

(விடை). சரிதான்.

(கோர்ட்டார்). கையெழுத்துப்போடும்.

(கையெழுத்து) பூமாதேவி.

கோர்ட் நோட்.

வாதியால கொடுக்கப்பட்டிருக்கிற பிராதையும், வாதி பக்கம் 1, 2, 3 சாக்ஷிகளின் வாக்குமூலங்களேயும் வாதி தறப்பு 2வது சாக்ஷி சித்திரகுப்தரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தெய்வலோக ஜெனன மரண ரிக்கார்டுகளேயும், உபயகக்ஷிக்காரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ரிக்கார்டுகளேயும், பார்வையிடப்பட்டு அடியில் கண்ட 7 இஷ்யூக்கள் ஏற்படுத்தப்பட்டது. 1,2, எதிரிகளின் ஆக்ஷேபனேகளே ஸ்டேட்மெண்ட் மூலமாய் எழுதி வாங்கப்பட்டது.

இஷ்யூக்கள்.

1. சித்திரகுப்தர் ரிக்கார்டு நம்பத் தகுந்ததா ?

2. இயமதர்மறஜர் மார்க்கண்டேயர் மீது பாசம் வீசியது அவர் உத்தியோக முறைமைப்படி நியாயந்தானு ?

3. ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினுறுதானு ?

4 எக்காரணத்தைக் கொண்டாகாகிலும் பரமசிவன் வாதியை உதைக்க நியாய முண்டா ?

5. வாதியை 1வது எதிரியாகிய பரமசிவன் கொன்றது நியாயமா?

6. மார்க்கண்டேயர் பதினுறு வயதில் வதைக்கப்படவேண்டியவர்தானு ?

7. பரமசிவன் காலால் இயமதர்மறஜர் உதைக்கப்பட்டு உயிர் வதைக்கப்பட்டதால் வர்திக்கு மான நஷ்டம் கிடைக்க வேண்டியதுதானு ?

1ம் எதிரி கொடுத்த ஸ்டேட்மெண்டு.

வர்தி பிருதில் சொல்லுவதுபோல் நான் ஆதியில் மர்ர்க்கண்டேயருக்கு பதினுறு வயதுதான் ஆயசு என்று வரங்கொடுக்கவில்லை. அவர் தகப்பனுரான மிருகண்ட மகரிஷி இயற்றிய தவத்திற்கு மெச்சி, எந்தக்காலத்திலும் 16 வயதோடேயே ஞானவானுயிருக்கப்பட்ட புத்திரனை உமக்குக் கொடுத்தேன் என்று வாக்களித்திருக்கிறேன். அப்படிக்கிருக்க, இந்த வாதி என் உத்திரவை அலக்ஷியம் செய்தும், செவ்வையாய் ஆராய்ந்து பாராமலும் சிவபக்தியிலிருப்பவனை பாசம் வீசின மமதையை அடக்கவேண்டியும், அவனுக்கு புத்தி கற்பிக்கவும், உதைத்துக் கொன்று பிறகு எழுப்பி மறுபடியும் சம்ஹாரத் தொழில் நடத்திவர ஆக்ஞாபித்திருக்கிறேன். இதானது என்பேரில் குற்றமாக ஏற்பட மார்க்கமில்லை.

2ம் எதிரி கொடுத்த ஸ்டேட்மேண்டு.

என் தகப்பனார் குழந்தை யில்லாத துக்கத்தால் பரமசிவனைக் குறித்து அரிய தவம் செய்து அதனால் பரமசிவனானவர் பதினாறு வயதில் ஓர் புத்திரனை அளித்ததாயும், எனக்கு பருவம் வந்தகாலத்தில் என்தாய் தந்தையர்கள் என்னிடம் சொல்லித் துக்கித்தார்கள். அதற்கு நான் பரமசிவனுடைய பாதாரவிந்தத்தை நாடி சதா அவரை பூசித்துக் கொண்டிருக்கிறேனென்று வெளியே கிளம்பி, சிவனை ஸ்துதிசெய்து பற்பல க்ஷேத்திரங்கள் போய் தெரிசித்து, கடைசியாய் திருக்கடையூ ரென்னும் க்ஷேத்திரம் வர, அப்போது இயமபடாள் என்னை இயமலோகம் வற வேணு மென்றும், எனக்கு ஆயுசு முடிந்து விட்ட தென்றும், சொன்னார்கள். நான் பரமசிவனை ஸ்துதி செய்து வருந்தும்போது அவர் ஏற்கனவே எந்தக் காலத்திலும் பதினாறு வயதோடேயே யிருக்கும் படியாய் உன்னை புத்திரனாக அளித்ததாய் உன் பிதாவுக்கு நாம் வரங் கொடுத்திருக்கிறோம், நீ பயப்படாதே யென்று சொன்னார். அதன் பேரில் நான் இயமபடாள் சொல்லைக் கவனியாது என் பூசை வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். அப்போது இயமதர்மராஜர் என் மீது பாசம் வீசினார்; லிங்க அடிவாரத்தின் அடிஸ்தலத்தில் நின்ற நான் உடனே லிங்கத்தைத் தழுவிக்கொண்டேன். அப்போது, அந்தப் பாசமானது லிங்கத்தின் பேரிலும் பட, உடனே அந்த லிங்கத்தினின்று பரமசிவன் ருத்திர ஆவேசமாய் பிரசன்னமாகி, இயமதர்மராஜனை தன் பாதத்தால் உதைத்து கீழே தள்ளி, சூலத்தால் குத்திக் கொன்றார். பிறகு மறுபடியும் அவரை எழுப்பி, சில புத்திமதிகளைச் சொல்லி, சம்ஹாரத் தொழிலை சரிவர நடத்தும்படியாய் ஆக்ஞாபித்தார். நான் பரமசிவத்தின் வரத்தின்படியே என்றும் சிவசேசனாக யிருக்கவேண்டியதே யல்லது, பதினாறு வயதில் வாதி தன்பிராதில் சொல்வதுபோல் வதைக்கப்படத் தக்கவனல்ல.

கோர்ட் ஆர்டர்.

மேலே கண்ட இஷ்யூக்கள் சம்பந்தமாய் தங்கள் தங்கள் ஆதாரங்களை விவரித்து தருந்த முகாந்தரங்களோடு விவாதஞ் செய்யும்படியாய் உபய தரப்பு வக்கீல்களுக்கும் ஆர்டர்செய்யப்பட்டது.

ஆர்க்குயெண்டுக்கு துவாபரயுகம் 2017வது வைகாசிமீ 25வ தேதி குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆர்க்குமெண்டு.

(துவாபரயுகம் 2017ஞு வைகாசிமீ 25உ)

வாதி வக்கீல் தூருவாச மகரிஷியின் விவாதம்.

இந்த வியாஜ்ஜிய சம்மந்தமாய் கோர்ட்டாரவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களுக்காக யேற்படுத்தி யிருக்கும் ஏழு இஷ்யூக்களில் முதலாவது இஷ்யூவில் கண்டபடி சித்திரகுப்தரின் ரிக்கார்டு நம்பத் தகுந்ததா வென்பதைப் பற்றி கோர்ட்டாருக்கு கொஞ்சமேனும் சந்தேகமிராமல் உண்மையுள்ள ரிக்கார்டென்று நான்சொல்லாமலே தங்களுக்கு விளங்கும். ஏனென்றால் இதுவரையில் எவ்வளவோ காலமாகியும் அவருடைய ரிக்கார்டைக்கொண்டு அதம் செய்யப்பட்ட ஜீவராசிகள் சம்மந்தமாய் யாவற்று நடவடிக்கைகளும், சரியாகவே இருக்கிறதே தவிர யாதொரு வித்தியாசமும் கிடையாது. மேலும், ஷை ரிக்கார்டில் கண்டபடி வாதிக்கும் 3¾ நாழிகை கண்டம் ஏர்ப்பட்டிருப்பதும் உண்மையாகவே நடந்திருக்கும் பிரத்தியக்ஷமான முகாந்திரத்தைக் கொண்டு ஷை சித்திரகுப்திரர் ரிக்கார்டு முற்றிலும் நம்பத் தகுந்ததுதான் என்று புலப்படுகிறது.

ஒருவேளை இந்த மார்க்கண்டேயர் விஷயத்தில் மட்டும் ஆயுசை குறைத்து எழுதக் கூடாதா என்ற சந்தேகம் ஒருக்கால் கோர்ட்டாரவர்களுக்கு உதித்தாலும் உதிக்கலாம். அப்படியானால் ஏர்க்கனவே மார்க்கண்டேயருக்கும், சித்கிரகுப்தருக்கும் ஏதாவது மனஸ்தாபமான விரோதங்க ளேற்பட்டிருக்கும் விஷயத்தில் அவ்விதம் செய்திருக்கக் கூடுமென்று அபிப்பிராயப்பட வேதுவாகும். அப்படி எவ்வித விரோதமு மிருப்பதாய் தெரியவில்லை. அதனால் அவ்வித சந்தேகமு மேற்பட மார்க்க மில்லை. ஆகவே 1வது இஷ்யூ வாதிக்கு முற்றிலும் சாதகமாக ஏற்படுகிறது.

2. இரண்டாவதான இஷ்யூவாகிய "இயமதர்மராஜர் மார்க்கண்டேயர் மீது பாசம் வீசிப் பிடித்தது உத்தியோக முறைமையில் நியாயந்தானா" என்பதைப்பற்றி யோசிக்குங்கால் சிவநேசர்கள் சிவத்தொண்டு புரியும் சமயத்தில் அவர்கள்மீது பாசம், இயமதண்டம் பிரயோகிக்கக் கூடாதென்று இயமபுரம் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் அவர் உத்தியோக அதிகாரத்தைச் செலுத்தி அதன்படி காரியாதிகளை நடத்த வேண்டிய சமயங்களில் அவ்விதம் உபயோகிக்காமல் ஷை காரியம் நடைபெறுதல் அசாத்தியமா யிருப்பின் அச்சமயம் எப்படியாவது காரியத்தை

முடிவுபெறச் செய்ய வேண்டியதா யிருக்கும் வேளையில் அப்படிப் பாசம் வீசி மார்க்கண்டேயரையோ, அல்லது மற்று மெவரையோ அதிகார முறைமைப்படி அதம் செய்தல் நியாயமே ஒழிய, அவ்விதம் செய்யாது தன் அதிகாரத்திற்கு பங்க முண்டுபெண்ணிக்கொள்ளல் உத்தியோகம் நடத்த அசக்தன் என்பதைத் தெரிவிக்கும். "தன்னைக் கொல்லவரும் பசுவைக் கொல்லலாம்" என்று தர்ம சாஸ்திரத்திலும் விலக்கு யேறபட்டிருப்பதைப் போல் இக்காரியம் செய்தது வாதியின் மீது குற்றமே யில்லையென்றும், அவர் செய்தது சாமர்த்தியமும் சமயோஜித புத்தி கூர்மை யுமுள்ளவரென்றும், உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

3. மூன்றாவது இஷ்யூவில் கண்டபடி "பரமசிவன் ஆதியில் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறு தானு" என்பதைப் பற்றி யோசிக்குங்கால், ஆதியில் மிருகண்ட மகாரிஷியானவர் செய்த தவத்திற்கு மனமிரங்கி பரசிவனானவர் மிருகண்ட மகாரிஷியைப் பார்த்து கூறியதும், அதற்கு அவர் பதிலுரைத்ததும், அதன்படி பரமசிவன் அவருக்கு வாக்களித்ததுமான, அடியிற்கண்ட மூன்று ஸ்லோகங்களினால் கோர்ட்டாரவர்களுக்கு நன்கு புலப்படும். அதாவது:—

1. தீயமகவாயொரு நூறாண்டிருக்கும் சிறுவனை ளிப்போமோ
தூயமகவாய்ப்பதினா றாண்டிருக்கும் தோன்றலளிப்போமோ
எயதவத்து மாதவனே எதுவிழைவிங் கியம்பென்ன
பாயும்விடையா னுவந்துரைப்ப பரமமுனிவனீ துரைத்தான்

2. புன்மை மகவையான் வேண்டேன் பொருந்து வயது குறைந்தாலும்
நன்மை பயக்கும் நல்லுணர்வு நன்னீதியினு நிலம்புகழும்
தன்மை பயக்குமொரு மகவைத்தரவே வேண்டு மருளென்ன
துன்மை மறையோ னிரந்திடலுந் தோகை பாகன்சொல்லுவனுல்

3. நன்று நீ வேண்டிய பரிசே நவைதீர் குணத்து ஞானநிலை
என்றுமுடைய ஓர்மகவை யீரெட்டாண்டே யிருப்பதற்கு
துன்றுதவத் தோயினி தளித்தேன் துயரந்தீர்ந்து வாழ்தியென்று
மன்றி நடிக்குஞ் செஞ்சோதி மழைமின்னென்ன மறைந்திட்டார்.

என்று அதிவீரராம பாண்டியன் அருளிச் செய்த மாகா புராணத்தில் வியக்தமாய் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு, ஆதியிலேயே பரமசிவனானவர் நூறாண்டுவரையி லிருக்கும் துர்புத்திரனை அருளவா பதினாறு ஆண்டுவரையி லிருக்கும் சற்புத்திரனை அருளவா வென்று மிருகண்ட

மகரிஷியை கேட்டதற்கு, அவர் வயது குறைந்தாலும் சற்புத்திரனக யிருக்க வேண்டுமென்று பதிலுரைக்க, அதன்படியே பரமசிவன் ஞான வானைப் பதினாறுவயதுவரையிலிருக்கும் ஓர் சற்புத்திரனை அருளினே மென்று மறைந்து விட்டார் என்பதாய் நன்கு புலப்படுவதாலிதற்கு வேறு அத்தாக்ஷி முதலிய சாக்ஷியங்கள் தேவையில்லாமலே ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறுதானென்று களங்கமற விளங்குகிறது.

மேலும் அதே சமயத்தில் ஷை விஷயங்களை ரிக்கார்டு செய்தவரு கிய இயமபுரம் கணக்கருன சித்திரகுப்தரும் பதினாறு வயது என்பதாய் ரிக்கார்டு செய்திருப்பதுமன்னியில் பதினாறு வயது முடிந்தவுடனே ஷை மார்க்கண்டேயருடைய உயிரை வாங்கும்படியாய் இயமதர்மருஜருக்கு யாதாஸ்து அனுப்பி யிருக்கிறதைக் கொண்டும், ஷை கணக்கு முற்றிலும் நம்பத்தகுந்ததென்பதைத் கொண்டும், ஆதியில் பரமசிவனுனவர் மார்க் கண்டேயருக்கு நிச்சயம் செய்து வாக்களித்த வயது பதினாறுதான் என்று களங்கமறப் புலப்படுகிறது. ஆகவே, 3வது இஷ்யூவும் வாதிக்கே யனுகூலமாக யேற்படுகிறது.

4. நாலாவதாக, எந்தக்காரணத்தைக் கொண்டும் "பரவசிவன் இயமனை யுதைத்தது அதிகாரமுறைமைப்படி நியாயந்தானு," யென் பதைப்பற்றி யோசிக்குங்கால் கேவலம் எவ்வளவோ கீழ்ப்பட்ட உத்தி யோகத்திலிருக்கப்பட்டவரையும் கூட, மேலதிகாரிகள் மரியாதைக் குறைவாய்த்திட்டவோ, மரியாதைக்குறைவு யேற்படும்படி அங்கஸ் பரிசம் செய்தோ, வேறு எவ்விதத்திலேயோ அவமானம் உண்டுபண்ணக் கூடாதென்று சட்டத்தில் சவிஸ்தாரமாய் தெரிவித்திருக்கும்போது, ரொம்பவும் கேவலமாயும் மரியாதைக்கு விரோதமாயும் பரமசிவன் இயம தர்மருஜரை காலாலுதைத்தது முற்றிலும் நியாய விரோத மென்பது கோர்ட்டாரவர்களுக்கு சொல்லாமலே புலப்படும். இயமதர்மருஜ ருடைய அந்தஸ்தோ சகல ஜீவராசிகளையும் வதைசெய்யவும் சகலரும் அவருக்கு அடங்கியிருக்கும்படி அடக்கி ஆள கடமைப்பட்டவர். அப்படிக் கிருக்க, அவரைக் காலால் உதைத்ததை நோக்கின் மற்ற ஜீவராசிகளுக் கெல்லாம் ஒருவித கேவலமாய் மதிக்கவும், அவரை எளனம் செய்யவு மேதுவாகும்.

ஒருக்கால் இயமதர்மருஜர் செய்தது நியாய விரோதமோ அல்லது தப்பான காரியமோ வென்று, பரமசிவனுக்குத் தோற்றப்

பட்டாலும், அவர் அதிகார முறைமைப்படி இந்த வாதிக்கு அபராதம் விதிக்கவோ, வேலையிலிருந்து நீக்கிவிடவோ செய்யலாமே யன்றி, இவ் விதமாய் மதிப்புக் குறைவாய் காலா லுதைக்க எள்ளளவேனும் நியாய மில்லை. ஆகையால் பரமசிவன் இயமனைக் காலா லுதைத்தது நியாய விரோதமும் தப்பிதமு மென்பது நிச்சயமாய் புலப்படுகிறது. ஆகவே 4 வது இஷ்யூவும் வாதிக்கு சாதகமாக ஏற்படுகிறது.

5 ஐந்தாவதான "பரமசிவன் இயமனை உதைத்துக் கொன்றது நியாயந்தானு," என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியது முக்கிய கடமையாக விருக்கிறது. எற்கனவே ஆயுசு முடிந்த ஜீவராசிகளின் உயிரை வதைக்கும்படியாய் இயமதர்மருஜனை பரமசிவனே நியமித் திருக்க, அதன்படியே நாளது வரையில் இயமதர்மருஜர் தன் வேலைகளை சரிவர நடத்தி வந்துமிருக்க, இச்சமயமும் மார்க்கண்டே யருக்கு பரமசிவனால் கொடுக்கப்பட்ட வயது பதினாறும் முடிந்த பிறகு, அவனை வதைக்க வேண்டியது நியாயமாயு மிருக்க, அதன்படியே நியாய வழியாலும் உத்தியோக வரம்புக்கு விரோத மின்றியும் மார்க்கண்டேயர் மீது இயமதர்மருஜர் பாசம் வீச, அந்த மார்க்கண்டன் தன்மீது வைத் துள்ள பக்தியை முன்னிட்டு, தான் ஆதியில் கொடுத்த வாக்தையும் யோசிக்காமலும், இயமதர்மருஜருக்கு கொடுத்திருக்கும் உத்திரவை கவனியாமலும், எல்லாந்தெரிந்தவரும், சம்ஹார கர்த்தருமாகிய பரம சிவன் இயமனை காலா லுதைத்ததும், சூலத்தால் குத்திக்கொன்றதும், முற்றிலும் நியாய விரோதமானதும், அடாத செய்கை யென்பதும் கோர்ட்டாரவர்களுக்கே தெரியவரும்.

ஒருவேளை மார்க்கண்டேயர் தனக்கு வேண்டியவரென்றும், அவரை வதைசெய்யப் படாதென்ற உத்தேசம் பரமசிவனுக்கு இருக்கும் பக்ஷத்தில், இயமதர்மராஜனை நேரில் வரவழைத்து மார்க் கண்டனை வதம் செய்யவேண்டா மென்றும், அவனுக்கு ஜாஸ்தியாய் வயதை விருத்தி செய்திருப்பதாயும், சொல்லி யிருக்க வேண்டியதும் தவிர, அதே சமயத்தில் ஷை மார்க்கண்டேயருக்கு இன்னம் இவ்வளவு வயது ஜாஸ்தியாய்க் கொடுத்திருக்கிறே னென்று மறுவரம் கொடுத் திருக்க வேண்டியது நியாயம். அப்படிக்கின்றி, அவ்விதம் செய்யாது தன் உத்திரவுப்படியே நியாயமாய் நடந்து யாதொரு தப்பிதமும் செய்யாத இயமதர்மருஜனை பரமசிவன் வதைசெய்ய கொஞ்சமேனும் நியாயமில்லை. மேலும் மும்மூர்த்திகளில் ஒருவரும், சம்ஹார

கர்த்தரூயு மிருக்கப்பட்ட இந்த பரமசிவன், முன்பின் யோசிக்காமல் தன் மனம்போன போக்கெல்லாம் இவ்வித வரம்பு கடந்த நடவடிக்கை செய்தது முற்றிலும் தகாத காரியம்.

இவர் ஒருகாலத்தில் அன்னமளிக்கஒப்புக்கொண்ட சிறுத்தொண்ட நாயனாரின் ஏகபுத்திரனை அறுத்துக் கறிசமைக்கச் செய்ததும், உல்லாசமாக கைலயங்கிரிச் சாரலில் தாமரைத் தடாகத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருந்த வாருணி, மோகினி, தார்த்திரி, கேசினி, விமலை, சுரை, ஆக்லாதனி என்னும் பெயர்களையுடைய சப்த கன்னிகைகளின்மீது காதல்கொண்டு, அவர்களின் கற்பை யழித்து, அவர்களிடமாக சப்த பாண்டிராரை உற்பவிக்கச் செய்ததும், (இது விபரம் 'விமலாக்ஞான' மென்னும் நூலில் தெளிவாய் விளங்கும்) வள்ளாள மகாறஜனிடத்தில் யாஜகம் கேட்டு, அன்னவரின் பாரியாளைச் சேர்ந்ததும், இவ்வித மநேக அக்கிரமங்கள் செய்தது, இவர் அந்தஸ்துக்கும் யோக்கியதைக்கும் சற்றும் பொருந்தாத காரியம். அதுபோலவே, இப்போதும் இப்பரமசிவன் மமதைகொண்டு இயமதர்மருஜனை உதைத்துக் கொன்றிருக்கிருர். இதானது முற்றிலும் நியாய விரோதமும், தப்பான காரியமாக ஏற்படுகிறது. ஆகவே ஐந்தாவது இஷ்யூவும் வாதிக்கே சாதகமாக ஏற்படுகிறது.

6. ஆருவதாக "மார்க்கண்டேயர் பதினறு வயதில் வதைக்கப்பட வேண்டியவர்தானு" வென்பதைப் பற்றி கோர்ட்டாரவர்கள் கவனிக்க வேண்டியது முக்கிய அவசியம். ஏனெனில் அதைப்பற்றியே மற்ற சம்பவங்கள் நடந்திருப்பதினுல் தான், அதைப்பற்றி தீரவிசாரிப்போமானுல் முதல் எதிரியாகிய பரமசிவன் எப்போது ஓர் காரியத்தை உத்திரவு செய்தாரோ அதன்படியே நடக்க வேண்டியதே தவிர, அதற்கு மாறுதலாக எந்தக் காரியத்தையும் செய்தல் தகாத விஷயமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அவருடைய ஆர்டர்படி சரிவர நடக்காதவர்களை தண்டிக்கவும், கண்டிக்கவும், பரமசிவனுக்கு முழு அதிகார மிருக்கிறது. அந்தியாதி அதிகாரங்களில், ஜீவராசிகளின் உயிரை அவருடைய உத்திரவுப்படியே அதஞ்செய்ய இந்த வாதியாகிய இயமதர்மருஜனை, சுய அதிகாரத்தோடும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக்கிருக்க, எந்தக் காரணத்தைக்கொண்டாவது இந்த வாதியாகிய இயமதர்மருஜனுலேயோ, அல்லது அவருக்கு பதிலாய் அதிகாரஞ் செலுத்தும் மற்ற எந்த அதிகாரியாலேயோ, மார்க்கண்டேயர் பதினறு வயதில் வதைக்கப்பட வேண்டியவரென்று, ஸ்பஷ்டமாய் புலப்படு

கிறது. ஆகவே, இந்த வாதி மார்க்கண்டேயருடைய உயிரை அதம் செய்ய பிரயத்தனப்பட்டாலும், அப்பிரயத்தனம் 1வது எதிரியாகிய பரமசிவனுடையதே யாதலினாலும், அவர் உத்திரவுப் பிறப்பித்திருக்கிற பதினாறு வயதுக்குமேல் எவ்விதக் காரணத்தைக் கொண்டும் மார்க்கண்டேயர் உயிருடனிருக்க ஆதாரம் கிடையாது. "சிவன் செயல் உள்ளபடி நடக்கும்" என்னும் உலகவழக்கத்திற்கேற்ப, உள்ளதற்கு மேல் ஒன்றும் நடவாது. அவைகளெல்லாம் சிவனுடைய செய்கைகளே யென்பது உலகப் பிரசித்தமாதலின், ஏற்கனவே 1-வது எதிரியாகிய பரமசிவனால் கொடுக்கப்பட்ட வயது பதினாறும் முடிந்தவுடன் மார்க்கண்டேயர் வதைக்கப்பட வேண்டியவரென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகவே 6 வது இஷ்யூவும் வாதிக்கு அநுகூலமாக ஏற்படுகிறது.

7. கடைசியாக ஏழாவது இஷ்யூப்படி "பரமசிவன் காலால் இயமன் உதைக்கப்பட்டு உயிர் வதைக்கப் பட்டதால் வாதிக்கு மான நஷ்ட மேற்பட வேண்டியது நியாயந்தானு" வென்பதைப் பற்றி கோர்ட்டாரவர்கள் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டியது முக்கிய அவசியம்.

சாதாரணமாக ஓர் அற்ப மனுஷனை ஒருவர் உதைப்பேனென்று சொன்ன மாத்திரத்தில் அதனால் அவனுக் கேற்படும் ஆத்திரத்தினு லெவ்வளவோ கெடுதல்கள் விளையக்கூடியதா யிருக்கிறதென்று கோர்ட்டாரவர்களுக்குச் சொல்லாமலே புலப்படக் கூடியதாக விருக்கிறது அப்படிக்கிருக்க, வாதியின் அந்தஸ்தோ கோர்ட்டாருக்குச் செவ்வையாய்த் தெரிந்த விஷயம். அவர் திக்குப் பாலகரில் ஒருவரும், தெக்ஷிண திக்குக் கதிபதியும், இயமபுரம் பூரு விசாரணை யுடையவரும், ஆயசு முடிந்த ஜீவருசிகளின் உயிர்களை வதைப்பவரும், பாபஞ்செய்த ஆத்மாக்களை ரவுரவாதி நரகத்தி லழுத்தி யவைகளுக்கு நல்லறிவு வூட்டு பவரும், புண்யாத்மாக்களை சொர்க்க லோகத்திற்கு அனுப்பிவைப்பவரும் ஆகிய இத்தியாதி அதிகாரத்தோடிருக்கப்பட்டவர், இவரை உத்தியோக முறைமையில் மேலதிகாரியா யிருக்கப்பட்ட 1வது எதிரியாகிய பரமசிவன் கேவலம் மானிட ஜெனனமாகிய 2வது எதிரியாகிய மார்க்கண்டேயருக்காகப் பரிந்து உதைத்துக்கொல்லுவதென்றால் இது எத்தகைய அடாத செய்கை யென்பதுவும், உவ்வித அடாத செய்கைகளுக்கு உட்பட்டிருந்த வாதிக்கு எவ்வளவு மான நஷ்டம் உண்டா யிருக்கக்கூடு மென்றும், கோர்ட்டாரவர்களே யூகித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதாகயிருக்கிறது.

உத்தியோக முறைமையில் வாதி தப்பிதஞ் செய்திருக்கும்பக்ஷத்தில் அவரை மரியாதைக் குறைவின்றிக் கண்டிக்கவும், தெண்டிக்கவும், 1-வது எதிரிக்கு அதிகாரமேற்பட்டிருக்கிறதே தவிர, அவயவங்களி லெல்லாம் கீழ்ப்பட்டதான பாதத்தால் வாதியை உதைத்துக் கொல்ல எவ்விதத்திலும் பரமசிவனுக்கு அதிகார மில்லாதிருக்க, வாதியை கேவலமாய் நினைத்து, வாதியின் அந்தஸ்தையும் கவனியாது, இழிவாகிய பாதத்தால் உதைத்துக் கொன்றதால், வாதிக்குப் பெருத்த மான நஷ்ட முண்டாயிருக்கிறது. யாதொரு குற்றமுஞ் செய்யாதவும், 1-வது எதிரியின் உத்திரவையே நிறைவேற்றிய நிரபதியான இந்த வாதியை அலக்ஷியமா யெண்ணி உலகில் அடாத செய்கைகளானவும் கௌரவக் குறைவை யுண்டுபண்ணும்படியாயும் செய்த 1-வது எதிரியின் கோரே செய்கைகளால் வாதிக்கு மான நஷ்ட மேற்பட்டிருக்கு மென்பது கோர்ட்டாரவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்படும். ஆகவே 7-வது இஷ்யூவும் வாதிக்கே சாதகமாக வேற்பட்டிருக்கிறது.

ஆனதுபற்றி, 1 முதல் 7 வரையிலுள்ள இஷ்யூக்கள் முழுவதும் வாதிக்கே சாதகமாகவும் எதிரிகளுக்குபிரதிகூலமாகவுமேற்பட்டிருப்பதினுலும், இந்தவாதி நிரபராதியும் யாதொரு தவறுதலுஞ்செய்யாதவரும் உத்தியோகமுறைமையில் அதிகஊக்கமும் சட்டவரம்புகடக்காமல் நடக்கப் பட்டவரும் தயை, தாக்ஷண்யம்,பாரபக்ஷம் முதலியவைகள் பார்க்காமல் தன் உத்தியோகத்தை நடத்துபவரு மென்பது சகல ரிக்கார்ட்டாலும் அனுமானத்தாலும் களங்கமறப் புலப்படுகிறது. 1வது எதிரியின் செய்கைகள் முற்றிலும்நியாய விரோதமும் பக்ஷபாத முயுடையதுமா யிருக்கிறதென்பது இந்த வியாஜ்ஜிய சம்பந்தமாய் மட்டும் அல்லாது,மற்றும் சகல சங்கதிகளினுலும் தெளிவாய்ப் புலப்படுகிறது· தாழ்ந்து நடக்கப் பட்டவர்களை அதிகமாய் அலக்ஷியஞ் செய்து அவர்களுக்கு நியாய விரோதமான கெடுதல்கள் செய்வதும், மீறி நடப்பவர்களுக்குப் பயந்து அவர்களுக்கனேக நன்மைகள் செய்வதும், இந்த 1வது எதிரிக்கு இயற்கைக் குணமாகவே அமைந்திருக்கிறது. இவர் முன்னர் எச்சில் பழங்களைக் கொடுத்த கண்ணப்ப நாயனுருக்குக் கெட்டுப்போன கண்களை மீட்டுக் கொடுத்தும், யாதொரு தவறுதலுஞ் செய்யாத மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியும், இன்னுமனேக விதமாகிய கெடுதல்கள் பற்பலருக்குச் செய்திருக்கிறுர். மேலும் தன்னை வில்லாலடித்த பாண்டு புத்திரனுகிய அர்ச்சுன மகாராஜனுக்கு பாசுபதாஸ்திரம் முதலிய வேண்டிய வரங்களைக் கொடுத்தும், பிரம்பால் தழும்புவிழ அடித்த பாண்டியனுக்கு வைகையை யடைப்பித்துக் கொடுத்தும், இன்னும்

இவ்விதமாயிவர் செயல்கள் அனேகமாய் நியாய விரோதமாக வேற்பட்டிருப்பது கோர்ட்டாரவர்களுக்கு ரிக்கார்டு மூலமாய்த் தெளிவாய்ப் புலப்படும். இதுவுமல்லாமல் இவர் மன்மதனை யெரித்த காரணத்திற்காக இவருக்குப் பரப்பிர்ம்ம ராஜ்ஜியம் ஸ்ரீ வைகுண்டம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரவர்களால் திரேதாயுகம் 2317ஞூத்திய 430 நெ. கேசில் தெண்டனையு மேற்பட்டிருக்கிறது. ஷை ரிக்கார்டையும் சமுகம் பார்வைக்குத் தாக்கல் செய்திருக்கிறேன். இவர் சப்த கன்னிகைகளின்பேரில் மோகித்து அவர்கள் கற்பையழித்த விஷயத்திற்காக "விமலாக்ஞானம்" என்னும் நூலையும் ரிக்கார்டாகத் தாக்கல் செய்திருக்கிறேன்.

2வது எதிரியாகிய மார்க்கண்டேயர் பரமசிவனால் கொடுக்கப்பட்ட வயதிற்குமேல் உயிருடனிருக்க யாதொரு ஆதாரமில்லாதிருக்க 1வது எதிரியின் சகாயத்தால் உயிருடன் இருத்தலானது சட்டத்திற்கும் 1வது எதிரியாகிய சம்ஹாரகர்த்தரான பரமசிவனுடைய வாக்குக்கும் முற்றிலுங் கௌரவக் குறைவா யிருப்பதோடுகூட இயமபுரம் அதிகார வரம்புக்கும் கௌரவக் குறைவை உண்டுபண்ணுகிறது.

ஆகவே நியாயவரம்பு நடக்காமலும் உத்தியோக முறைமையில் 1வது எதிரியின் ஆர்டரையே நிறைவேற்றிய வாதியைக்கொன்ற குற்றத்திற்காக 1வது எதிரியாகிய பரமசிவனை தெய்வலோகம் பினல்கோடு 176வது செக்ஷன்படி சிக்ஷைசெய்யும்படிக்கும், ஏற்பட்ட வயது முடிந்தும் உயிருடனிருக்கும் 2வது எதிரியின் உயிரை வாங்கும்படி வாதிக்கு அதிகாரம் கொடுக்கும்படியாய் ஆர்டர் செய்யும்படிக்கும், வாதியைப் பரமசிவன் காலாலுதைத்ததற்கு பரமசிவன்பேரில் மான நஷ்டத்திற்கு வியாஜ்ஜியம் செய்துகொள்ள வாதிக்கு அனுமதி கொடுக்கும்படியாயும் அதிக வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறேன். சாக்ஷிகள் வாக்குமூலங்களையும் சகல ரிக்கார்டுகளையும் செவ்வையாய் பரிசோதனை செய்து மேலேகண்ட என் கோருதல்கள் நிறைவேறும்படியாய் உத்திரவாகக் கோருகிறேன்.

(வாதி வக்கீல்) தூருவாஸ மகரிஷி.

1-வது எதிரி வக்கீல் வேதவியாசரின் விவாவதம்.

இவ்வியாசத்தின் சாராம்சத்தை களங்கமறத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளும்படி கோர்ட்டாரவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கிற 7 இஷ்யூக்களும் வாதிக்கே சாதகமாக யிருப்பதாய் வாதி வக்கீல் வெகு சுளுவாய் செசிவித்துக்கொண்டதைக் கவனிக்க ஆச்சர்யகரமாக யிருக்கிறதென்பது கோர்ட்டாரவர்களுக்கே வியக்த்தமாய் நன்கு புலப்படும்.

முதலாவது இஷ்யூவில் கண்ட விஷயம் அதாவது "சித்திரகுப்தர் ரிக்கார்டு நம்பத் தகுந்ததா" என்பதைப்பற்றிக் கவனிக்குங்கால் ஷை ரிக்கார்டு பிசகென்று நான சொல்லவரவில்லை அந்த அம்சத்தைப்பற்றியும் இங்கு விஸ்தரிக்கவேண்டிய அவசியங் கிடையாது. வாதி வக்கீல் பிரஸ்தாபித்த பிரகாரம் ஷை ரிக்கார்டு நம்பத் தகுந்ததே யொழிய பிசகானதல்ல. ஆனால் ஷை ரிக்கார்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் நிஜமான விஷயத்தின் அர்த்த சாராம்சத்தை தெளிவாய்த் தெரிந்து அதன்படி நடக்காத தப்பிதத்தினுல் இவ்விதகாரியங்கள் நடைபெறவும் வாதிக்கு இவ்வளவு ஹிம்சைகள் நேர்ந்திருக்கிறது. அதாவது சித்திரபுத்திரர் ரிக்கார்ட்டில் தாவா சம்பந்தமான மார்க்கண்டேயர் பேரேட்டில் அவருக்கு ஆயசு "ஈரெட்டு" என்று எழுதப்பட்டிருக்க, அதை வெளிப்படை அர்த்தமாகவும் எண் சுவடி முறைமையாக ஈரெட்டுப்பதினாறு என்ற அர்த்த மேற்படுத்தி, 16 வயது முடிந்தவுடன் சித்திரபுத்திரர் இயமதர்மராஜருக்கு யாதாஸ்து அனுப்பிய தவறுதலினுல் பொதுப்படையாக சித்திரபுத்திரர் ரிக்கார்டு பிசகென்றுசொல்லும்படி நேர்ந்ததேயொழிய ஷை ரிக்கார்டு ஒருபோதும் பிசகாது. பரமசிவனுல் சொல்லப்பட்ட வாக்கியத்தின் முழுசாராம்சத்தையும் கவனித்து சித்திரபுத்திரர் வயது நிர்ணயத்தைப பற்றி எழுத வேண்டியதிருக்க, "ஈரேட்டு" என்ற ஒரு பதத்தை மாத்திர மெழுதியதற்கு அர்த்தமும் சரிவர கண்டுபிடிக்காமலிருந்தது சித்திரபுத்திரரின் தவறுதலே யொழிய ரிக்கார்டு பிசகென்றுசொல்ல நியாயமே யில்லை.

வாதி வக்கீல் 3 வது இஷ்யூ சம்பந்தமான விவாதத்திற் சொல்லியிருக்கும் மார்க்கண்டேயர் உற்பத்தி யென்னும், அதிவீரராம பாண்டியனுல் அருளிச் செய்யப்பட்டிருக்கும் மாக புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாடலாகிய,

நன்றுநீ வேண்டிய பரிசே நவைதீர் குணத்து ஞானநிலை
யென்றுமுடையவோர் மகவை ஈரெட்டாண்டே யிருப்பதற்கு
துன்றுதவத்தோயினி தளித்தேன் துயரந்தீர்ந்து வாழ்கியென்று
மன்றிநடிக்குஞ் செஞ்சோதி மழைமின் னென்னமறைந்திட்டார்

என்னும் செய்யுளில் என்றும் ஞானவானுய் பதினுறு வயதிலேயே யிருக்கும்படியான ஓர் சற்புத்திரனை உனக்கு அளித்தேன், நீ துயரந் தீர்ந்து வாழக்கடவாயென்று, பரமசிவன் மிருகண்டு யகரிஷிக்கு அருளிச் செய்து மறைந்தா ரென்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது.

அதை தப்பர்த்தமாக பதினாறு வயதில் ஓர் புத்திரனை கொடுத்தா ரென்று வாதி வக்கீல் விவாதஞ் செய்வது முற்றிலும் பொருந்தாத காரியம். அப்படியேயவர் சொல்லியிருக்கும் பக்ஷத்தில், கடைசியில் "துயரந் தீர்ந்து வாழ்தி" யென்று சொல்ல மார்க்கமேற்படுமா? சரியான யௌவன பருவத்தில் மகன் இறந்துவிடும் பக்ஷத்தில் தந்தைக்கு துயரமில்லாதிருக்குமா? அப்படிக்கிருக்கின் பரமசிவன் துயரந்தீர்ந்து வாழக்கடவாயென்று சொல்லுவாரா? முற்றிலும் கவனியாது சித்திர புத்திரர் ரிக்கார்டு செய்தது மன்னியில் தவறுதலாய் பதினாறு வயதில் மார்க்கண்டேயரை வதைசெய்யும்படி இயமதர்மருஜருக்கு தெரிவிக்க வும், அவரும் அதை முற்றிலு மாழ்ந்து கவனித்துப் பாராமல் மார்க் கண்டேயரை வதை செய்ய யத்தனித்ததும், பரமசிவன் அவருக்குப் புத்தி கற்பிக்க வேணுமென்று இவ்வித சம்பவம் நடத்தியு மிருக்க, வாதி வக்கீல் அவைகளை முற்றிலும் மறைத்துச்சொல்வது சற்றும் பொருந்தாத காரியம். இயமதர்மருஜனை பரமசிவன் உதைத்துக் கொன்ற பின்பு மாகபுருணம் மார்க்கண்டேயர் பிறப்புரைத்த அத்தி யாயம் 62வது செய்யுளில் பரமசிவன் சொல்லியிருப்பதாவது:—

ஊழிகெடுங் காலத்து மொவ்வாத கர்ப்பகத்தும்
பாழிநெடுந் தவத்தோ யாண்டுபதி னாறாகி
யாழியுலகி லிறவாதமர்ந் தினிதாய்
வாழியென வுரைத்து நண்பன் மறைதலுமே

என்று சொல்லப்பட்டிருக்கிறதை கவனிக்கில் கற்பகாலந்தோறும் பதினாறு வயதிலேயே உலகில் பிறவாமல் இனிமையாய் வாழி யென்று யவரை வாழ்த்தி யிருக்கும் பரமசிவன் வாக்கியத்தையும், மார்க் கண்டேயர் புராணத்தில் திருக்கடையூர் க்ஷேத்திரத்தில் பரமசிவன் மார்க்கண்டேயருக்குச் சொல்லிய செய்யுளையும்கவனித்தால்அதாவது:—

பாலனே பயப்படாதே பகர்ந்தனல் வயதீரெட்டும்
ஞாலத்தோரறியத்தந்தேன் நாளுமெண்பதினாறாக

என்று சொல்லப்பட்டிருப்பதில் முன் சொன்ன வயது பதினா றென்பது எக்காலத்திலும் பதினாறு வயதே, நீ பயப்படாதே என்றும், "ஞாலத்தோரறியத் தந்தேன்" என்று சொல்லியிருக்கும் வாக்கைக் கொண்டே ஷை வயது நிர்ணயம் பிறகு கொடுத்ததல்ல வென்றும், ஆதியிலே கொடுத்ததுதான் என்று தெரிவிக்கும்படியாய் தந்தேனென்று இறந்தகாலத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கொண்டும், பரமசிவன் மார்க்கண்டேயருக்கு ஆதியிலேயே கொடுத்த வயது பதினாறு தான்

என்றும் வியக்தமாய் தெரிந்திருந்தும், சித்திரபுத்திரர் ரிக்கார்டைக் கொண்டு தவறுதல்கள் நடந்திருப்பதால், ஷை ரிக்கார்டு பிசகென்று தெளிவாய் தெரிவதால், 1வது இஷ்யூ வாதிக்கு பிரதிகூலமாயும், எதிரிகளுக்கு சாதகமாவும் ஏற்படுகிறது.

இரண்டாவது இஷ்யூவாகிய "இயமதர்மறஜர் மார்க்கண்டேயரை சிவபூசையிலிருக்கையில் பாசம்வீசிப்பிடித்தது உத்தியோக முறைமைப் படி நியாயந்தானு" என்பதைப்பற்றி யோசிக்கு மிடத்தில், இயமபுரம் சட்டத்திற்கு விரோதமாய் நடத்தல் நியாய விரோத மென்றும் தப்பிதமென்றும், சொல்லாமலே தெளிவாய்ப் புலப்படக் கூடியதா யிருக்கிறது. மேலும், இயமபுரம் சட்டத்தை அதிபராயிருந்து நடத்தக் கூடியவரும், அதை நடைபெறச் செய்பவருமான இயமதர்மருஜரே இவ்வித சட்ட வரம்புகடந்த நடத்தையை செய்தால் மற்ற எனைய பிராஜைகளும் அதை யலக்ஷயஞ் செய்ய எப்படமோகையால், இத்தியாதி காரியத்தைச் செய்தது வாதிபேரில் பலத்த குற்றமாக வேற்படுகிறது. பரமசிவன் தன்பேரில் எவ்விதக் கெடுதல் செய்தாலும் பொருத்துக் கொள்வார். தன் தொண்டன் பேரில் அகாரணமாக ஒரு கெடுதல் செய்தால் அதை மாத்திரம் பொறுக்கமாட்டார். அப்படிக்கிருக்க சிவபூசை செய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் அதைப் பங்கப்படுத்தி மார்க்கண்டன்மீது பாசம் வீசியது இந்த வாதிபேரில் பெருத்த தப்பிதமாக வேற்படுகிறது. ஆகவே, இரண்டாவதுஇஷ்யூ எதிரிகளுக்கே சாதகமாக வேற்படுகிறது.

3. மூன்ருவது இஷ்யூவாகிய "ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேய நுக்கு கொடுத்த வயது பதினறுதானு" வென்பதைப்பற்றி யோசிக்குங் கால், பரமசிவன் ஈச்வராம்சம் பொருந்தினவர்; அவர் ஒருக்கால் சொன்னதை மாற்றி யெக்காரணத்தைப் பற்றியும் வேறுவிதமாய் சொல்லக்கூடியவரல்ல வென்பது கோர்ட்டாரவர்களுக்கே தெரிந்த விஷயம். ஈச்வராதிகளுக் கொருபோதும் பக்ஷபார மிராது. பரம சிவனுக்கு யாவராலும் யாதொரு பிரதிப் பிரயோஜனமும் எக்காலத் திலும் கிடையாது. அவரவர் செய்வது அவரவரின்பிரயோஜனத்திற்கே யன்றி வேறொருவரின் பிரயோஜனத்திற்கல்ல. அதாவது:—

இந்த சீவனுல் வரும் அரும் பகையெல்லா மிவன் செயலல்லாமல்
அந்தச் சீவனுல் வருமென்ற மூடர் அதோகதி யடைவார்கள்
இந்தச் சீவனுல் வருமரும்பகை யெலா மிவன் செயலல்லாமல்
அந்தத் தேவனு லன்றெனும் விவேகியே யம்பலவீட்டடைவரே.

அப்படிக்கிருக்க பரமசிவனானவர் முதலாவது சொன்னதை மாற்றிப் பிறகு வேறுவிதமாகச் சொல்ல நியாயமில்லை. மேலும் இது விஷயத்தைப்பற்றி 1வது இஷ்யூ சம்பந்தமாய் என்னால் சொல்லப் பட்டிருக்கும் விஷயங்களினால் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு ஆதியில் கொடுத்த வயது பதினாறல்ல வென்று வியக்தமாய் விளங்குகிறது. இது சம்பந்தமாய் "மார்க்கண்டன் பிறப்பு" என்னும் மாக புராணத்திலுள்ள அரிய நூலை இத்துடன் தாக்கல் செய்திருக்கிறேன். அதை முற்றிலும் கவனித்துப் பார்க்கின் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு ஆதியில் கொடுத்த வயது பதினாறல்ல வென்று தெளிவாய் விளங்கும். ஆகவே, 3வது இஷ்யூவும் எதிரிகளுக்கே அனுகூலமாக ஏற்படுகிறது.

4. நாலாவது இஷ்யூவான "எந்தக் காரணத்தைக்கொண்டோ பரமசிவன் இயமனை யுதைக்க நியாயமுண்டா" வென்னும் விஷயத்தைப் பற்றி வாதி வக்கீல், அபரிமிதமான குற்றம் 1வது எதிரியாகிய பரம சிவன் பேரில் ஏற்பட்டிருப்பதாய் தெரிவிப்பது முற்றிலு மாச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறது. ஈச்வராதிகளின் திரேகத்திலுள்ள அவயவங்களில் கீழான அவயவமென்றும், மேலான அவயவமென்று முண்டா? ஷை அவயங்களை ஒன்றைக் கீழென்றும், ஒன்றை மேலென்றும், நாமே ஏற்படுத்திக்கொண்டால் மட்டும் தோற்றப்படுமே தவிர, கீழான அவயவமென்று எதையும் யாவராலும் சொல்ல முடியாது. ஒவ்வொரு அவயவமும் தன் தன் தொழிலைநடத்தும்போது, அதுவே மேலானதாகும். அத்தொழிலை வேறொரு அவயவமும் நடத்த முடியாது. நடத்தினாலுங் கூட சௌகரியமாக நடைபெறாது. அப்படிக்கிருக்க, அந்த அவயவத்தை கீழானதென்று யாவரால் சொல்லமுடியும்? ஒருவனுக்கு காலில்லாமல் மற்ற அவயவங்களைக்கொண்டு அத்தொழிலை நடத்தினால் அதானது மற்ற எல்லா அவயவங்களுக்கும் அதற்கு அதிபனான ஆத்மாவுக்கும் அகௌரவத்தை கொடுக்கும்போது அந்த அவயவத்தை கீழான அவயவமென்று யாருஞ் சொல்லத் துணியார்கள்.

பரமசிவன் லிங்க வடிவத்திலிருந்து கிளம்பி தன் அடிவாரத்திலிருந்த வாதியைக் கண்டிக்க தன் அவயவங்களில் சமீபத்தும் சுளுவில் எட்டக்கூடியதுமான தன் பாதத்தால் உதைத்தாரே யொழிய, இயமனை அவமரியாதை செய்ய வேணுமென்ற கெட்ட எண்ணத்தின் பேரி லுதைத்தவரல்ல. அவருக்குத் தன் அவயவங்களில் ஒன்று கீழென்றும் ஒன்று மேலென்றும் வித்தியாசங் கிடையாது. அவர் வித்தியாசத்தைக் கருதப்பட்டவருமல்ல. மேலும்பரமசிவன் சம்ஹாரத் தொழில் சரிவர நடத்தவும் யாதொரு தவறுதலன்னியில் ஒழுங்கு படுத்தும்படியாய் இந்த வாதியை நியமித்திருக்க, அதற்கு மாறுதலாய்

நடந்த இயமனைக் கண்டிக்கவும், தெண்டிக்கவும், பரமசிவனுக்கு அதிகார மேற்பட்டிருக்கிறதேயொழிய யதிகாரமில்லாதவரென்று எவருஞ் சொல்லத் துணியமாட்டார்களென்பது கோர்ட்டாரவளுக்கே சவிஸ்தாரமாய் புலப்படும். அப்படிக்கிருக்க, அதிகார முறைமையில் தனக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகத்திலிருக்கும் இயமதர்மராஜனை யுதைத்தது பரமசிவன்பேரில் குற்றமேற்பட மார்க்கமில்லை. ஆகவே, 4வது இஷ்யூவும் எதிரிகளுக்கே அநுகூலமாக வேற்படுகிறது.

5. ஐந்தாவதான இஷ்யூவானது "இயமனைப் பரமசிவன் உதைத்துக் கொன்றது நியாயந்தானா" என்பதே. அதைப்பற்றி கவனிக்க வேண்டியது முக்கிய அவசியம். பரமசிவனனவர் சம்ஹார கர்த்தாவாக யிருப்பதாலும், இன்னும் மற்ற அநேக தொழில்கள் அவரால் நடைபெற வேண்டி யிருப்பதாலும், ஸம்ஹாரத் தொழிலை மட்டும் சரிவர நடத்த வேண்டியதற்காக வாதியாகிய இயமனை பரமசிவன் நியமித்திருக்க, அவர் தன் வேலையில் அஜாக்கிரதையாயிருந்து சரிவர ஜீவராசிகளை அதம் செய்யாமல், ஆயசு முடியாத மார்க்கண்டேயரை அதஞ் செய்ய எத்தனம் செய்தால், அவருக்கு புத்தி கற்பிக்கவேண்டி இயமதர்ம ராஜனை பரமசிவன் உதைத்து சூலத்தால் குத்தி தெண்டனை செய்தார். அச்சமயம் வாதியாகிய இயமதர்மராஜருக்கு மூணே முக்கால் நாழி கெண்டம் ஏற்பட்டிருந்ததால் அது காரணமாக இயமன் உயிர் நீங்கி, பிறகு $3\frac{3}{4}$ நாழிகை கண்டம் நீங்க, பரமசிவன் அனுக்கிரகத்தினால் உயிருடன் கிளம்பினர். இச்சம்பவம் இவ்வாறாக நடந்திருக்க பரமசிவன் வாதியைக் கொன்றது நியாய விரோதமென்று சொல்வது முற்றிலும் பொருந்தாதகாரியம். இயமதர்ம ராஜனுக்கு $3\frac{3}{4}$ நாழிகை கண்டம் பரமசிவனால் ஏற்பட்டு உயிர் நீங்கி பிறகு அவராலேயே விமோசனமாகி உயிர்ப்பித்து எழும்புவாரென்று சித்திரபுத்திரர் ரிக்கார்டிலுள்ளபடியே சமூகம் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்திருப்பதைக்கொண்டு இதன் உண்மை தெளிவாய்ப் புலப்படும். வாதி வக்கீலானவர் பரமசிவன் அநேக அடாத செய்கைகள் செய்திருப்பதாய் சிற்சில உதாரணங்களைக் காட்டியிருப்பதெல்லாம் பரமசிவன் அன்னவர்களின் மன உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியதற்காகச் செய்த அருட் செய்கையே யன்றி, வேறுவித வித்தியாசமல்ல வென்பது அது சம்பந்தமான புராண ரிக்கார்டுகளை பார்வையிட்டால் தெளிவாய்த் தெரியவரும். பரமசிவன் தயை, தாக்ஷண்யம், பக்ஷபாதம் முதலியவைகள் இல்லாதவராக யிருப்பதால் எவ்வித நியாய விரோதமான செய்கைகளுஞ் செய்ய மாட்டாரென்பது கோர்ட்டாரவர்களுக்கே நன்கு புலப்படும். ஆகவே ஐந்தாவது இஷ்யூவும் எதிரிகளுக்கே சாதகமாக ஏற்படுகிறது.

6. ஆருவது இஷ்யூவானது "மார்க்கண்டேயர் பதினறு வயதில் வதைக்கப்பட வேண்டியவர்தானு" என்பதைப் பற்றி யோசிக்குங்கால் ஆதியில் 1வது எதிரியாகிய பரமசிவனல் என்றும் பதினறு வயதோடு ஞானவானு யிருக்கும்படியான ஆயுசை மார்க்கண்டேயருக்கு கொடுத்திருப்பதாய் அவரின் தந்தையான மிருகண்ட மகரிஷிக்கு வாக்களித்து வரம் கொடுத்திருக்க, 2ம் எதிரியாகிய மார்க்கண்டேயரும் அதேவிதம் வாஸ்தவமென்பதாய் சமுகம் கோர்ட்டில் ஸ்டேட்மெண்டும் கொடுத்திருக்க, அதற்கு மாறுதலாக மார்க்கண்டேயர் பதினறு வயதில் எவ்விதம் வதைக்கப்பட வேண்டியவரென்று சொல்லக் கூடும்? அதே சமயத்தில் ஷை விஷயங்களை ரிக்கார்டு செய்தவரான சித்திரபுத்திரர் சரிவர பரமசிவத்தினுடைய வாக்கின் அர்த்தத்தை தெரிந்து கொள்ளாமல் தன் இஷ்டம்போலும் தன்னறிவுக் கெட்டினவரையிலும் ஈரேட்டு என்ற பதத்தை மாத்திரம் பதிவு செய்து முன்பின் நடந்த சங்கதிகளின் விஷயங்களை தெளிவாய்த் தெரிந்து கொள்ளாமல் பதினறு வயதில் மார்க்கண்டேயர் வதைக்கப்பட வேண்டியவரென்று சித்திரபுத்திரர் சொல்வதும், அதற்கு அனுசரணையான ஷை ரிக்கார்டும் முற்றிலும் பொருந்தாத காரியம். ஒருக்கால் சித்திரபுத்திரரானவர் தவறுதலாய் பரமசிவனுடைய வாக்கின் அர்த்த சாராம்சத்தை கண்டுபிடித்து ரிக்கார்டு செய்ய அசக்தராயிருந்தபோதிலும் இயமதர்மருஜராகிய வாதி அதற்கு அதிபரா யிருப்பதால், அதன் உண்மைகளை சரிவர தெரிந்து கொள்ளத் தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்க வேண்டியது. முக்கிய அவசியம். அதைக் கவனியாது, விட்டு தன் இஷ்டம் போல் ஆயுசு நிர்ணயம் முடிவு பெருமலிருக்கும் சமயத்தில், மார்க்கண்டேயர் மீது பாசம் வீசியது தகாத செய்கையும், தப்பிதமுமாகவும் ஏற்படுகிறது. ஆகவே 6வது இஷ்யூவும் எதிரிகளுக்கே சாதகமாக ஏற்படுகிறது.

7. ஏழாவது இஷ்யூவில் கண்டபடி பரமசிவன் காலால் இயமன் உதைக்கப்பட்டு உயிர் வதைக்கப்பட்டதால் இயமனுக்கு மான நஷ்டமேற்பட வேண்டியதுதானு என்பதைப்பற்றி யோசிக்கில், பரமசிவனே ஈச்வராம்சம் பொருந்தினவர்; மேலும், சம்ஹாரத்தொழிலை நடத்தும் இயமதர்மருஜருக்கு அதிபரும், மும்மூர்த்திகளில் ஒருவருமாயிருப்பவர்; அவ்வளவு கௌரவமும் அந்தஸ்தும் உடையவர் தன் கீழ் உத்தியோகத்திலிருப்பவரை உத்தியோக முறைப்படி கண்டனை தெண்டனை செய்தால் அது உத்தியோக முறைமையின் அம்சத்தை விளக்குமேயொழிய அதினல் வாதிக்கு யாதொரு மானநஷ்டமு முண்டாக

மார்க்கமில்லை. யாதொரு பற்றுதலும் உறவும் உத்தியோக முறைமைப் பாத்தியமும் இல்லாதவும், தனக்குக் கீழ்ப்பட்டவனால் எவ்வித கெடுதல்கள் ஏற்பட்டு அப்பேர்ப்பட்ட கெடுதல்களால் வாதிக்கு மானமழிந்து பலராலும் மதிக்கப்படும் தன்மைபோய் இகழ்ச்சி யடையும்படி யேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட சம்பவங்களில் மாத்திரம் மானநஷ்டமென்பது உண்டே தவிர இந்த விஷயமாய் வாதிக்கு யாதொரு மான நஷ்டமும் உண்டாகவில்லை.

ஈச்வராம்சத்தோடுங் கூடிய பரமசிவனால் வாதிக்கு இவ்வித தண்டனை யேற்பட்டிருப்பதில் வாதிக்கு பெரும் புகழ் உண்டாயிருக்கிறதே தவிர, யாதொரு இகழ்ச்சியும் அவமரியாதையும் உண்டாகவே இல்லை யென்பது கோர்ட்டாரவர்களுக்கே நன்கு புலப்படும். வாதியாகிய இயமதர்மராஜர் தான் செய்த தப்பிதத்தை உணர்ந்து இனி நல்ல புத்தி வரும்படியான ஏற்பாடு செய்யவும், வாதியை முன்னிலும் அதிக புத்தி தீக்ஷண்யமான கௌரவத்தை உடையவராக செய்யக் கருதி அருட்ப் பார்வையுடன் பரமசிவனனவர் இயமன்மீது பாதம் படும்படியாக தன் அருள் திருப்பாதத்தால் வாதியை உதைத்ததால் வாதிக்கு அதிக கௌரவமும் யோக்கியதையும் ஏற்பட்டிருக்கிறதே தவிர மான நஷ்டம் உண்டாகவில்லை யென்பது சொல்வாமலே புலப்படுகிறது. ஆகவே, ஏழாவது இஷ்யூவும் வாதிக்கே பாதகமாயும் எதிரிகளுக்கே சாதகமாகவும் ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த தாவா சம்பந்தமாய் கோர்ட்டாரவர்களா லேற்படுத்தப்பட்டிருக்கிற 1முதல் 7 வரையிலுள்ள இஷ்யூக்கள் ஒன்றேனும் வாதிக்கு சாதகமில்லாமல் எதிரிளுக்கே அநுகூலமா யிருப்பதாலும், 1வது எதிரி தன் அந்தஸ்துக்கு தக்கபடியே ஒன்றையேனும் மறைக்காமல் நடந்த சம்பவங்கள் முழுமையும் ஒப்புக்கொள்ளுவதாலும், இது சம்மந்தமாய் என்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ரிக்கார்டுகள் முழுதும் 1வது எதிரி யிவ்விதம் வாதியைத் தண்டனை செய்தது நியாயமெனவும், அவர் எப்போதும் நியாய வழியிலேயே நடப்பவரும், தயை, தாக்ஷண்யம், பக்ஷபாதம் முதலியவைகளின்றி எவ்வுயிரையும் நிரந்தரமாய் அருட்ப் பார்வையுடன் கவனிப்பவரென்றும். ஐச்வரியவானென்றும், ஏழையென்றும், சன் மார்க்கனென்றும், துன்மார்க்கனென்றும், தன்னை நேசிப்பவரென்றும், தன்னைப் பகைப்பவரென்றும், தன்னைப் பூஜிப்பவரென்றும், தன்னைப் பழிப்பவரென்றும் இத்தியாதி வித்தியாசங்களைப் பாராட்டாமல் எவ்வுயிரையும் சமமாய்

காக்கப்பட்டவரென்றும், சொன்ன சொல் மாறுதவரென்றும், இன்னும் பலவாறு அவருடைய நற்செய்கைகளை நன்கு விளக்கக் கூடியதாயிருக்கிறது. மேலும் 1ம் எதிரியின் செய்கைகளால் வாதிக்கு யாதொரு கெடுதலும் நடந்திருக்கவில்லை யென்று வாதி பிராதைக்கொண்டே தெரிய வருவதால், தேய்வ லோகம் பீனல் கோட் 176வது சேக்ஷன் படிக்குள்ள கோலைக்குற்றம் 1வது எதிரியைச்சார்வதற்கு மார்க்கமில்லாமல் 1ம் எதிரியே வாதியை உயிர்ப்பித்து எழுப்பி யிருக்கிறார். ஆகவே, ஷை செக்ஷன்படிக்குள்ள கோலைக்குற்றம் பரமசிவனை கட்டுப்படுத்தமாட்டாது. மேலும், தேய்வலோகம் சிவில்புரோசீஜர் கோடு 54வது சேக்ஷன்படி வாதிக்கு மான நஷ்டம் ஏற்பட்டிருக்கவுமில்லை மேலதிகாரியானவர் கீழதிகாரிகளை உத்தியோக முறைமைப்படி தப்பிதத்திற்காக தண்டித்தால் அதனால் மான நஷ்டம் ஏற்பட மார்க்கமில்லை. அது வாதிக்கு புத்தி கற்பித்தாக முடியும். அப்படிக்கிருக்க, வாதியின் துன்மார்க்கச் செய்கையால் நடந்த குற்றத்தைக் காண்பிக்காமல் புத்தி கற்பித்தவர் மீது மானநஷ்டம் கிடைக்க வேணுமென்று வாதி இக்கோர்ட்டாரை சாங்ஷன் கெட்பது முற்றிலும் தகாத காரியம் ஆகையால், வாதிக்கு மானநஷ்ட வியாஜ்ஜியம செய்வதற்கு சாங்ஷன் கொடுக்க யாதொரு ஆதாரமுமில்லை. ஆனது பற்றி, வாதியின் வரம்பு கடந்தவும், மரியாதைக்கு விரோதமாயும் மமதையோடும் கொண்டு வந்திருக்கும் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து, 1ம் எதிரியாகிய பரமசிவனை பிராதிலிருந்து விலக்கிவிடும்படியாய்ப் பிரார்த்திக்கிறேன்.

(1வது எதிரி வக்கீல் வேதவியாஸர்)

2ம் எதிரி வக்கீல் வஸிஷ்டரின் விவாதம்.

1. இவ்வியாஜ்ஜியம் சம்மந்தமாய் தாவா பிராதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களின் உண்மையை தெரிந்துகொள்ளும் பொருட்டு கோர்ட்டாரவர்களால் எற்படுத்தப்பட்டிருக்கும் 7 இஷ்யூக்களில் வாதிக்கு ஒன்றேனும் சாதகமில்லாதிருக்க, வாதி வக்கீல் உண்மையை மறைத்து, ஷை 7 இஷ்யூக்களும் தனக்கே சாதகமாயிருப்பதாக புகலான வார்த்தையால் தெரிவித்திருப்பது முற்றிலும் பெருத்த ஆச்சரியத்தை விளைவிப்பதோடு, மெல்லிய புல்லின்மேல் உட்கார்ந்த கொசுவானது அப்புல் வளைந்ததை நோக்கி தன்னை அதிக கனமென்றும் நினைத்து, பெரிய எருமைக்கிடா மாட்டின்

கொம்பின் மேல் உட்கார்ந்து, அவ்வெருதை நோக்கி நான் உட்கார்ந்த பளுவால் உன் திரேகம் நோகிறதா வென்று கேட்டதைப் போலும் வியப்பைத் தருகிறது.

உண்மை பாகத்தை கோர்ட்டார் தெரிந்து கொள்ளவேண்டியதற்கு கோர்ட்டாரவர்களா லேற்படுத்தியிருக்கும் 1வது இஷ்யூவிற் கண்டபடி சித்திரபுத்திரர் ரிக்கார்டு நம்பத்தகுந்ததா வென்பதைப் பற்றி கவனிக்கவேண்டியது முக்கியமாதலின், அதைப்பற்றி 1ம் எதிரி வக்கீலாகிய வேதவியாசர், வாதி வக்கீல் சொல்வது போல் ரிக்கார்டு முற்றிலும் நம்பத்தகுந்ததென்றும், ஆனுல், அந்த ரிக்கார்டை ஆதரிப்பவரான சித்திரபுத்திரரின் தவறுதலாலும், ஈச்வராம்சம் பொருந்திய பரமசிவனது வாக்கின் அர்த்த சாராம்சத்தை அறிந்து கொள்ளக் கூடாமல், தவறுதலாய் ரிக்கார்டு செய்தமையால் அந்த ரிக்கார்டே தவறுதலுக்கு காரணமாயிருப்பதாலும் ஷை ரிக்கார்டு நம்பத்தக்கதல்லவென்று பொதுப்படையாய்ச் சொல்ல மார்க்க முண்டாயிருக்கிறதென்று சாங்கோப சாங்கமாய் தெரிவித்திருக்கிருர். ஆனதுபற்றி, அது விஷயமாய் நான் அதிகமாக விஸ்தரிக்கவேண்டியதில்லை, யென்ருலும் சொன்னது ஒன்றிருக்க, ரிக்கார்டில் பதிவு செய்தது வேருகயிருக்க, அந்தப் பதிவு செய்ததற்கு அர்த்தம் ஒன்றிருக்க, அதற்கு அர்த்தஞ் செய்தது வேறுவிதமாயிருக்க, இவ்வித வேறுபாடுகளுக் கெல்லாம் ஆதாரமாயுள்ளது ஷை ரிக்கார்டே யாகையால், ரிக்கார்டு எக்காலத்திலும் நம்பத் தகுந்த ரிக்கார்டு அல்ல வென்பதாய் தெளிவாய் புலப்படுகிறது. ஆகையால் 1வது இஷயூ எதிரிகளுக்கே சாதகமாயிருக்கிறது.

2 இரண்டாவது இஷ்யூவானது இயதர்மறுஜர் மார்க்கண்டேயரை பாசத்தால் பிடித்தது அவர் உத்யோக முறைமையில் நியாயந்தானு வென்பதைப்பற்றி கவனிக்க வேண்டியது முக்கிய அவசியம். இயமதர்மருஜரானவர் இயமபுரத்துக் கதிபரும், இயமபுரம் சட்டத்தை ஆதரிப்பவருமா யிருந்தும், அவரால் ஆதரிக்கப்பட்டிருக்கும் இயமபுர சட்டம் 28வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதான "சிவனடியார்கள் சிவத்தோண்டு புரியுஞ் சமயத்தில் அவர்கள் மீது பாசம் இயமதண்டம் உபயோகிக்கக் கூடாது" என்னும் சட்ட வரம்புக்கு விரோதமாய் தானே 2ம் எதிரியான மார்க்கண்டேயர், மனனமற்று, சலனமற்று, புலனற்று, பொறியற்று, காசரணுதிகளின் தொழிலற்று, பரமசிவன் மீது அன்பைச் செலுத்தி, சிவபூசை யிலிருக்கையில், இயமபுரஞ்

சட்டத்திற்கு விரோதமாய் பாசம் வீசினதானது வாதியின் மமதையை யும், வரம்புகடந்த தொழிலையும், உத்யோக கர்வத்தையும், தெளிவாய்த் தெரியப்படுத்துகிறது. மேற்கண்ட குற்றத்தை சாமான்யாள் செய்தி ருப்பாரானால் அவர்களை தண்டிக்க வேண்டிய வாதியே அக்குற்றத்தைச் செய்தால் அவரை மேலதிகாரிகள் தண்டிக்க வேண்டியதவசிய மென்பது கோர்ட்டாரவர்களுக்கே தெளிவாய்ப் புலப்படும். தன் ஆதரணையிலிருக்குஞ் சட்டத்திற்கு விரோதமாய்த் தானே நடந்தால் அது குற்றமாக மாட்டாதென்று எவரால் சொல்லக்கூடும்? அதைப் பற்றி வாதி வக்கீல் அவ்விதம் செய்ததானது சமயோஜித சாமர்த்திய மான செய்கையென்றும், இன்னம் பலவகையாய் விஸ்தரித்திருப்பதும், மெத்த ஆச்சர்யத்தையும், வார்த்தை சாதுர்யத்தின் திறைமையையும், நன்கு விளக்குகிறது.

3. மூன்றுவதான இஷ்யூ ஆதியில் பாமசிவன் மார்க்கண்டேய னுக்கு கொடுத்த வயது பதினறுதானு வென்பதைப்பற்றி யோசிக்குங் கால் ஈச்வராம்சம் பொருந்தினவரும், மும்மூர்த்திகளிலொருவரும், சம் ஹாரகர்த்தரும், கேட்டவர்களுக்கு வேண்டிய வரங்க ளளிப்பவருமான, பரமசிவன் ஆதியில் ஒரு வரம் கொடுத்து, பிறகு அதை மாற்றி வேறு வரம் கொடுப்பாரா வென்பது கோர்ட்டாரவர்களுக்கே தெரிந்த விஷய மாதலின் நான் அதைப்பற்றி யதிகமாய் விஸ்தரிக்க வேண்டியதில்லை.

பரமசிவன் எக்காலத்திலும் கொடுத்த வரத்திற்கு மாறுதலாக செய்யப்பட்டவரல்ல வென்பது உலகப் பிரசித்தமான விஷயம். முன் னர் பத்மாசூரன் செய்த தவத்திற்கு மனமிரங்கி அவனிடம் பிரசன்ன மாகி யாது வரம் வேண்டுமென்று வினவியதற்கு அவ்வசுரன் நான் யார் தலைமீது கையைவைத்தாலும் அவர்கள் உடனே எரிந்து சாம்பலாக போய்விடும்படியான வரம் தந்தருள வேண்டுமென்று பரமசிவனை வேண் டிக்கொள்ள, அதற்கவர் மறுப்புச் சொல்லாமல் கோறியபடியே அவ்வர த்தைக் கொடுத்தார். உடனே அத்துன்மார்க்கமும் துஷ்டத்தனமு முள்ளவனும், அழிவு காலத்தை சமீபத்தில் தருவித்துக் கொண்டிருப்ப வனும், விசுவாசமற்ற குணத்தை யுடையவனுமான பத்மாசூரன் நீர் கொடுத்த வரத்தை பரீக்ஷித்துப் பார்ப்பதற்கு முதல்முதலில் உம்மை யே நான் சோதிக்கத் தருந்த அசாமியாக தீர்மானித்திருக்கிறேனென்று பரமசிவன் தலையில் தன் கையை வைப்பதற்காக அவரை துரத்த, அதற்குப் பரமசிவன் அவன்மீது சினங்கொள்ளாமல் தான் கொடுத்த வரமும் கெட்டுப்போகாமல் தான் உடனே ஒட்டமெடுத்து, அய்யரொ ளிக்காயில் ஒளிந்துகொண்டார். (அய்யராகிய பரமசிவன் அக்காயினி

டமாக தன்னை ஒளித்துக்கொண்டமையால் அக்காய்க்கு அன்றுமுதல் அய்யரொளிக்கயென்றும், ஐந்து வரம்புள்ளதாயிருப்பதால் ஐவேலிக்கா யென்றும், பெயர் வழங்கி வருகிறது). பிறகு அத்துன்மார்க்கனானவன் பரமசிவனிருக்கு மிடமறியாமல் எங்குந்தேடித் திருந்துகொண்டிருக்கையில், இது விஷயங்களைத் தெரிந்துகொண்டவரும், பரமாத்வாய் விளங்கப்பட்டவரும், இரக்ஷக கர்த்தாவாகவும், சகல ஜீவராசிகளையும் தன்னிடத்தில் வைத்து இரக்ஷிக்கப் பட்டவரும், தயாள குணதீனரும், அபயமென்றோரை யாதரிப்பவரும், மும்மூர்த்திகளிலொருவரும், சாத்வீகாம்சம் பொருந்தியவரும், ஆபத்பாந்தவரும், அனாத ரெக்ஷகருமாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணருடைய அருமைத் திருமேனியைக் கொண்ட அவதார மூர்த்தியாகிய ஸ்ரீ கிருஷ்ணபிரான் பரமசிவனிடம் வந்து, நடந்த விஷயங்களைக் கேட்டு, ஆநந்த பரவசமாகி, உடனே பத்மசூரன் அலைந்து திரியுமிடத்திற்கு தமது உருவத்தைமாற்றி, ஊர்வசி, ரம்பை மேனகை திலோர்த்தமை, முதலிய தெய்வப் பெண்களுக்கு மேலான ரூபலாவண்யமும், கந்தருவ ஸ்திரீகளுக்குமேல் அழகும், இரதியையும் தோற்கச் செய்யத்தக்க உருவத்தோடுங்கூடிய ஸ்திரீ ரூபமாய் திருவுருக்கொண்டு சென்று, கீழ் நோக்கிய பார்வையோடு நின்றுகொண்டிருந்தார் அப்போது பத்மாசூரன், தான் நினைத்து வந்த நினைப்புமாறி, அதிரூபலாவண்யமுடைய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஸ்திரீ ரூபத்தைக் கண்டு மோகித்து அவரிடஞ்சென்று தன்னைச் சேரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அதற்கவர் பலதரம் மறுத்து பிறகு கடைசியாய் பத்மாசூரனை நோக்கி நீ தவஞ்செய்த வேஷத்தோடிருப்பதால் அசுசியாக தோற்றப்படுகிறது, ஸ்நானஞ்செய்து பிறகு வந்து என்னுடன் சேரலாமென்று சொல்ல, அத்துன்மார்க்கனுக்கு அதிக ஆனந்தமுண்டாகி உடனே ஸ்நானஞ்செய்யப் புறப்பட்டான். அச்சமயம் ஸ்ரீ கிருஷ்ணனானவர் பத்மாசூரன் சென்றவிடமெல்லாம் தண்ணீர் அகப்படாமலிருக்கும்படியாய் செய்தார். அசுரன் எங்கும் அலைந்து திரிந்து எவ்விடமேனும் கொஞ்சம் ஜலங்கூட அகப்படாமையால் வெய்யலில் வேசாரி, காமவிகாரங்கொண்டு ஸ்திரீ ரூபத்தோடிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிடம் வந்து முறையிட்டான். அச்சமயம் சமீபத்தில் ஓர் சிறு குழியில் கொஞ்சந் தண்ணீர் உண்டு பண்ணி அதோ இருக்கிற ஜலத்தில் கொஞ்சம் உன் கையால் தொட்டு தலையில் வைத்துக்கொண்டு வா, நாம் காமவிகாரத்தைத் தணித்துக் கொள்ளலாமென்று சொல்லவே, அத்துன்மார்க்கனுக்கு அடங்காத சந்தோஷமுண்டாகி அத்தண்ணீரை கையால்தொட்டு தன் தலையில் வைத்தான். உடனே பரமசிவன் கொடுத்திருந்த வரத்தின் பிரகாரம்

பத்மாசுரன் எரிந்து சாம்பலானான். பிறகு ஸ்ரீ கிருஷ்ணபகவான் பத்மாசுரன் எரிந்து சாம்பலான விவரத்தை பரமசிவனிடம் தெரிவித்ததின் பிறகு பரமசிவன் தமது உருவத்தோடு வெளியானார். ("அச்சமயம் பரமசிவனானவர் ஸ்ரீ கிருஷ்பகவான் ஸ்திரீ ரூபத்தைக்கண்டு மோகிக்க உடனே ஸ்கலிதமாகிய வீரியத்தை கிருஷ்ணபகவான் தனது கைபால் ஏற்றார். உடனே அது ஒரு ஆண் சிசுவாய் அவதரித்தது. அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் கையிலேந்தியபடியால் அக்குழந்தைக்கு கையீனாரென்றும், அய்யனாரென்றும், பெயர் வழங்கிவருகிறது'). ஆகவே பரமசிவன் தன்னிடம் பிரசன்னமாவதற்காக அவ்வசுரன் எவ்வளவு காலம் அகோர தவஞ்செய்திருக்கவேண்டும்? அவ்வளவு தூரம் விசுவாசித்து தவஞ்செய்த பத்மாசுரனை பரமசிவன் கொடுத்த வரமே எரித்து சாம்பலாக்கினதல்லவா? இத்தியாதி விஷயத்தால் பரமசிவன் கொடுத்த வரத்திற்கு மாறுதல் செய்யக்கூடியவரல்ல வென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. அதைப்போலவே, இந்த மார்க்கண்டேயனையும் கொடுத்த வரத்திற்கு மாறுதலாய் வதஞ்செய்ய எத்தனித்த வாதியாகிய இயமதர்மராஜனை கொன்று தன் வரம் கெடப் போகாதபடி பரமசிவன் காப்பாற்றி யிருக்கிறாரென்று தெளிவாய்த் தெரிகிறது. மேலும் மார்க்கண்டேயர் ஜனனமானபோது ஜாதக ஆரூடத்தைக் கவனித்தாலே என்றும் ஞானவானாயிருப்பாரென்று அவர் ஜனனகாலத்தில் ஐந்து கிரகம் உச்சத்திலிருக்கும் லெக்னத்தின் பலனால் தெரியவருகிறது. இதற்காதாரமாக மாக புராணம், மார்க்கண்டேயர் பிறப்பு உரைத்த அத்யாயம், 10வது செய்யுளினால் அடியில் கண்டபடி புலப்படும்.

"சொல்லும் வியாழகேந் திரத்திற் றூயமுகூர்த்தம் தனிலைந்த
நல்லகிரக உச்சத்திற் சதயநாளில வையில்லாள்
வல்ல மகவை யளித்தலுமே வானோர்வானோர்க்கிரனோர்க்கிறைமுனிவர்
வில்லிற் போலியு நுதலரம்பை மாதரேவரும் வியந்து வந்தார்."

என்று சொல்லப்பட்டிருப்பதினால் தெரிய வருகிறது. அதற்கேற்பவும் மார்க்கண்டேயரானவர் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று படியையும் விட்டு அதற்கப்பால் விதேக முத்தியைத் தருவதுமான ஞானமார்க்கத்தில் சதா அப்பியாசியாகி சிவத்துடன் கலந்தவராயிருந்து மிருப்பதாலவருக்கு ஆயசு நிர்ணயிக்க முடியாதென்றும் புலப்படுகிறது. இதற்கு பிரமாணம் (திருமந்திரம்)

[ரில்லை

எண்ணுயிரத்தாண்டு யோகமிருப்பினும் கண்ணுறழதனைக் கண்டறிவா
உண்ணுடி யுள்ளே யொளிபெற நோக்கிற் கண்ணுடிபோலே கலந்திருந்
[தானே.

என்றும்,

மூலநாடி முக்குட்டுல துச்சியு நாலுவாச நடவிலிருப்பீர்காள்
மேல வாசல் வெளியுறக் கண்டபின், காலன் வரர்தைக் கனவிலு
[மில்லையே

என்றும் சொல்லப்பட்டிருப்பதால், மார்க்கண்டேயர் சதாவுமிருடன் சிரஞ்சீவியாயிருக்குந் திறமை யுடையவரென்று களங்கமற உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்படும்போது ஆதியில் பரமசிவன் திரிகால மூணர்ந்திருந்தும், மார்க்கண்டேயருக்கு பதினறு வயதிலிறந்து போகும்படியான வரத்தைக் கொடுப்பரா? ஆனதுபற்றி பரமசிவன் மார்க்கண்டேயருக்குக் கொடுத்த வயது பதினறல்லவென்றும், என்றும் பதினறு வயதுடன் சிரஞ்சீவியா யிருக்கும்படியான வரத்தை கொடுத்திருக்கிறுரென்று களங்கமறத் தெரிய வருவதால் 3-வது இஷ்யூவும் எதிரிகளுக்கே சாதகமா வேற்படுகிறது.

4. நாலாவது ஐந்தாவது இஷ்யூக்கள் சம்பந்தமாய் 1-வது எதிரியின் வக்கீல் தெளிவாயும் வியக்தமாயும் வாதித்திருப்பதாலும் ஷை இஷ்யூக்கள் சம்பந்தமாய் 2-வது எதிரிக்கு யாதொரு தகவலும்சம்பந்தமுமில்லாததிருப்பதாலும் நான் அதைப்பற்றி யாதொன்றும் வாதிக்க வேண்டியதவசிய மில்லையாயினும், ஷை இஷ்யூக்கள் சம்பந்தமாய் வாதி வக்கீல் சொல்வதெல்லாம் கொஞ்சமேனும் பொருத்த மற்றதும், தாறுமாருய் பரமசிவனது யோக்யதை, கௌரவம், அந்தஸ்து, அம்சம் முதலியவைகளை கவனியாமலும் அவரது குணுதிசயங்களை யுணர்ந்து கொள்ளாமல் அவைகளுக்கு முற்றிலும் மாறுதலாய் வாதிக்கும் விஷயம் முற்றிலும் தப்பான காரியம். பரமசிவன் செய்யும் காரியங்கள் ஒன்றேனும் தவறுதலா யிராதாகையால் ஷை இஷ்யூக்கள் முற்றிலும் வாதிக்கே பிரதிகூலமாகவும், எதிரிகளுக்கே சாதகமாகவு மேற்படக்கூடியதாயிருக்கிறது.

5 ஆருவது இஷ்யூவாகிய மார்க்கண்டேயர் பதினறு வயதில் வதைக்கப்பட வேண்டியவர்தானு என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியது முற்றிலும் கவனிக்கப்படவேண்டிய அம்சம். ஷை இஷ்யூ சம்பந்தமாய் வாதி வக்கீல் வாதிப்பதெல்லாம் பரமசிவன் கொடுத்த வயது பதினறுதானென்றும், அந்தப் பதினறு வயது முடிந்தவுடன்

வேண்டுமென்று கேட்பது பொருத்தமாகுமா? அதைப்போல் வாதியா கிய இயமதர்மருஜனால் நடந்த பல குற்றங்களால் சேர்ந்த ஆபத்துக் காக பரமசிவனை மானநஷ்டங் கொடுக்கவேண்டுமென்பது மெத்த வியப்பைத் தருகின்றது.

இயமதர்மருஜர்மீது யாதொரு தவறுதலு மில்லாதிருக்கும் சமயத்தில் பரமசிவன் வாதிக்கு யாதேனும் கெடுதலோ, மரியாதைக்கு பங்கம் உண்டுபண்ணும் படியான குற்றமோ, செய்திருந்தால் அச்சமயம் வாதி மானநஷ்டம் கேட்கவேண்டியது நியாயமே ஒழிய, வாதியின் தவறுதல்களைக் கண்டுபிடித்து அதற்காக கண்டித்து புத்தி கற்பித்த பரமசிவன்மீது யாதொரு குற்றமு மில்லாதிருக்க, அவர்மீது வாதி மானநஷ்டத்திற்கு தொடர யாதொரு சட்ட ஆதாரமுமில்லை. மேலும், பரமசிவனது அங்கஸ்பரிசம் வாதியின்மீது பட்டதே வாதிக்கு மெத்த வனுகூலத்தையும், ஞானத்தையும், அருளையும் கொடுத்திருக்க அவைகளை உணராது பரமசிவனது கால் என்றும், கையென்றும், அங்கவித்தியாசங்களை தன் சிறு மதியால் உத்தேசஞ்செய்து, அதனால் தனக்கு மானங் கெட்டுப் போனதாய் உணர்ந்து, மானநஷடங் கேட்பது வாதியின் தெரியாத் தன்மையேயொழிய வேறில்லை. ஆகையால் வாதிக்கு யாதொரு மானநஷ்டமு மேற்படாததைக்கொண்டு 7-வது இஷ்யூவும் எதிரிகளுக்கே சாதகமாகவும் வாதிக்கு பிரதிகூலமாகவுமேற்படுகிறது. இத்தியாதி பலகாரணங்களாலும் 1 முதல் 7 வரையிலுமுள்ள இஷ்யூக்களில் ஒன்றேனும் வாதிக்கு சாதகமில்லாமலும் எதிரிகளுக்கே யனுகூலமாக யிருக்கிறபடியாலும், வாதிக்கு யேற்பட்டிருப்பதாய்ப் பிராதிற் சொல்லப்பட்டிருக்குங் கஷ்டங்கள் முழுவதும் வாதியின் தவறுதலினாலே நடந்திருப்பதாலும், வாதி தன் கீழ் அதிகாரிகளை சரிவர கவனித்தும், கணக்கை தணிக்கை செய்தும், அஸடக்கியாள திறமை போதாமல் உத்தியோகம் நடத்தி வந்தவரா யிருப்பவருக்கு இனிமேல் நல்ல புத்தியை யுண்டுபண்ணி காரியாதிகளை ஒழுங்காய் நடத்திவரும்படி இயமதர்மருஜனை பரமசிவன் அங்கஸ்பரிசஞ் செய்தும், கொன்றும், பிறகு எழுப்பி மறுபடியும் சம்ஹாரத் தொழிலை சரிவர நடத்தும்படிக்கும், ஆக்ஞாபித்திருக்கின்றார். மேலும் பரமசிவன் கொடுத்த வரம் கெட்டுப்போகாம லிருக்கும்படியாய் 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயரை சொற்ப வயதில் வதைக்கப்படாமல் காப்பாற்றியுமிருக்கின்றார். அன்றியும் 1-ம் எதிரியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ரிக்கார்டுகளைக்கொண்டும் பொய் சொல்லவேண்டியதவசிய மேற்படாதவரும், திருநேத்திரதாரியும் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனரும்,

மார்க்கண்டேயர் வதைக்கப்பட வேண்டியவரென்றும், தவறுதலாக ரிக்கார்டு செய்த சித்திரகுப்தரின் ரிக்கார்டைக்கொண்டு சொல்லும் வார்த்தை பிரயோஜனமற்ற தென்பது, சேர்ட்டாரவர்களுக்கே தெரியவரலாம். ஆதியில் பரமசிவன் வாக்கால் மார்க்கண்டேயருக்கு வயது பதினாறுதானென்று சொல்லப்பட்டிருக்கும் பக்ஷத்தில் எவ்வித தெய்வீக சக்தியாலேயோ இதுவரையில் மார்க்கணடேயர் உயிர் நீங்கியிருக்க வேண்டியவர். அவ்விதமில்லாததைக்கொண்டே சித்திரபுத்திரர் தவறுதலாக ரிக்கார்டு செய்தும், கூடி பரமசிவத்தின் அருள் வாக்குக்கு தவறுதலான அர்த்தஞ் செய்திருக்கிறாரென்றும், களங்கமற விளங்குகிறது. தன் கீழ் உத்தியோகஸ்தரான சித்திரபுத்திரரின் கணக்கை நம்பியே சம்ஹாரத் தொழிலை நடத்தும் இந்த வாதியாகிய இயமதர்மராஜர் இதுவரையிலும் ஜீவராசிகளின் உயிரை வதஞ்செய்திருக்கிறாரே ஒழிய ஷை சித்திரபுத்திரரின் ரிக்கார்டை இதுவரையில் பரிசோதனை செய்தவருமல்லவென்று சித்திரபுத்திரர் வாக்குமூலத்தைக்கொண்டு இந்த வாதியின் உத்தியோக நடத்தும் திறமை திருப்திகரமானதல்லவென்று நிதானிக்க விடமுண்டாகிறது. மேலதிகாரிகளாக யிருக்கப்பட்டவர்கள் கீழ் அதிகாரிகளை யடிக்கடி கவனித்து அவர்களின் கணக்கு, யோக்யதை, உத்தியோகம் நடத்தும் திறமை, இவைகளை பரிசோதனை செய்தாலன்றோ காரியாதிகள் ஒழுங்காய் நடைபெறும். அவ்விதம் சித்திரபுத்திரரின் கணக்கை யடிக்கடி பரிசோதனை செய்யாத குறைவால் இவ்விதமாக சித்திரபுத்திரர் தவறுதலான ரிக்கார்டு செய்யவும் அந்த ரிக்கார்டை பூராவும் நம்பிய வாதிக்கு இவ்வளவு கஷ்டங்கள் நடக்கவும் யேற்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை. ஆகவே தவறுதலான ரிக்கார்டைக்கொண்டு வாதி மார்க்கண்டேயருக்கு ஆதியில் பரமசிவன் கொடுத்த வயது பதினாறுதானென்று சொல்வது முற்றிலும் பொருந்தாத காரியம். ஆகையால் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது கண்டிப்பாய் பதினாறு அல்லவென்று புலப்படுவதால் ஆறுவது இஷ்யூவும் எதிரிகளுக்கே சாதகமாக வேற்படுகிறது.

6. கடைசியாக 7-வது இஷ்யூவாகிய பரமசிவன் காலால் இயமன் உதைக்கப்பட்டதால் இயமனுக்கு மானநஷ்டம் கிடைக்க வேண்டியது தானு வென்பதைப்பற்றி 1-வது எதிரியின் வக்கீல் வேதவியாசரானவர் தெளிவாய் வாதித்திருக்கிறார். அதைப்பற்றி திரும்பவும் நான் அதிகமாக சொல்லவேண்டிய தவசிய மில்லையாயினும், தான் பல குற்றங்களைச் செய்து, அந்தக் குற்றங்களால் தனக்கு யாதேனும் ஆபத்துக்கள் சம்பவித்தால், அதற்காக பிறரால் தனக்கு மான நஷ்டம் கிடைக்க

சம்ஹார கார்த்தரும், மும்மூர்த்திகளில் ஒருவரும், ஈச்வராம்சம் பொருந்தினவராயு மிருக்கப்பட்ட 1-வது எதிரியாகிய பரமசிவன் ஸ்டேட்மெண்டைக்கொண்டும் மார்க்கண்டேயர் எக்காலத்தும் ஞான வானுய், பதினாறு வயதாகவே உயிருடனிருக்க வேண்டியவரொன்றும், பதினாறு வயதில் வதைக்கப்பட வேண்டியவரல்லவென்றும், தெளி வாய்ப் புலப்படுவதாலும், 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயர் சதாசிவ நேசரை நேசிப்பவரும், சிவபூஜை செய்பவரும், உலகவுபகாரியுமா யிருக்கப்பட்டவராதலாலும், விதேக முத்தி கைவல்யத்தை யடையக் கூடிய மார்க்கத்தைக் கைப்பற்றினவருமா யிருப்பதாலும், 2-ம் எதி ரியை பிராதிலிருந்து விலக்கி பிராதை தள்ளுபடி செய்தும், 2-ம் எதிரி ஆயசு முடிந்துவிட்டதென்றும், அவரை வதஞ்செய்ய அநுமதி கொடுக்க வேண்டுமென்றும், வாதி தவறுதலாக கேட்கும் கோருதலை ரத்து செய்தும், என்னை அலக்கழித்து அவமானஞ் செய்யக் கருதி யிப்பிராது கொடுத்த வாதிக்கே சட்டப்படி தகுந்த சிக்ஷை விதிக்கும் படிக்கும் வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

(வஸிஷ்டர்)

கோர்ட்டு ஆர்டர்:—இந்த நம்பர் வைகாசிமீ 30உ முடிவு சொல்லப்படும்.

தீர்ப்பு. (JUDGMENT).

வைகாசிமீ 30உ

இவ்வியாஜ்ஜியத்தின் சாரமானது வாதியாகிய இயமதர்ம ருஜன், திருக்கடையூரென்னும் க்ஷேத்திரத்தில் அமுர்தகடேச்வர மூர்த்திகரமாய் விளங்கப்பட்ட 1-ம் எதிரியாகிய பரமசிவனை சதா பூஜை செய்துகொண்டிருந்த 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயருக்கு ஏற்கனவே 1-ம் எதிரியாகிய பரமசிவன் கொடுத்த வயது 16 முடிந்து விட்டபடியால் அவரை வதஞ் செய்ய பிரயத்தனப்பட்டுப்போய், சிவபூஜை செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயரைக்கண்டு, கூப்பிட்டு வராததினுல், பாசத்தை வீசிப்பிடிக்க, அப்பாசம் சிவ லிங்கத்தின் பேரிலும் பட்டதால், 1-ம் எதிரியாகிய பரமசிவன் சினந்து, தன் பக்தனை பிடிக்கப்போனதால் கோபித்து, சூலாயுத பாணியாக ருத்திரமூர்த்தியாய் பிரசன்னமாகி வாதியை உதைத்து,

சூலத்தால் குத்திக்கொன்றுரேன்றும், பிறகு வாதியை 1-ம் எதிரி உயிருடன் எழுப்பி மறுபடியும் சம்ஹாரத்தொழிலை நடத்தும்படி ஆக்ஞாபித்ததாயும், பரமசிவன் இயமனை காலால் உதைத்ததாயும், அதனால் தனக்கு மான நஷ்ட மேற்பட்டிருப்பதால் தனக்கு 1-ம் எதிரியால் மானநஷ்டங்கிடைக்க வேண்டியதற்கு தகுந்த கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடர சாங்ஷன் கிடைக்கவேண்டுமென்றும், வாதி தன் தரப்புக்கு காலன் சித்திரகுப்தர், பூமாதேவி இவர்களை சாட்சியாகக் கோறி, வாதியால் இந்ததாவா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இது விஷயமாக வாதி பக்கம் சாக்ஷிகளால் பிராதின் விஷயங்கள் ருஜுவிடப்பட்டிருப்பதோடு, 1-ம் எதிரியாகிய பரமசிவன், வாதி பிராதில் பிரஸ்தாபிப்பதுபோல் வாதியைக் கொன்றதாய் ஒப்புக்கொண்டு, அப்படிச் செய்ததானது 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயருக்கு தன்னால் ஆதியில் 16 வயது கொடுக்கப் படவில்லை யென்றும், எந்தக்காலத்திலும் 16 வயதோடு ஞானவானுயிருக்கும்படியாய் வரங் கொடுத்திருக்க, அதற்கு விரோதமாய் வாதி 16 வயதில் மார்க்கண்டேயரை அதஞ்செய்ய எத்தனித்ததா லந்தத் தவறுதலுக்காக வாதிக்கு புத்தி கற்பிக்கவேண்டி யுதைத்துக் கொன்றதாயும், அக்குற்றம் தன்னைச் சார்வதற்கு நியாயமில்லை யென்றும், ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறுர். இது விஷயத்தை யாமோதித்து 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயரும் ஸ்டேட்மெண்டு எழுதி வைத்திருக்கிறுர். ஆகவே, இந்த தாவா சம்மந்தமாய் வாதி பிராதில் சொல்லும் விஷயங்கள் உண்மைதானு வென்பதைப் பற்றி கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் எதிரிகளே அக்குற்றங்களைச் செய்ததாய் ஒப்புக்கொள்வதாலும், வாதி சாக்ஷிகளும் இச்சம்பவம் நடந்தது உண்மை யெனவும் வாக்கு மூலங் கொடுத்திருப்பதாலும், வேறு அத்தாக்ஷியான ருஜுக்கள் தேவையில்லை. ஆனுல் 1-ம் எதிரியாகிய பரமசிவன் வாதியைக் கொன்றது நியாயமாவென்றும், 2-ம் எதிரியாகிய மார்க்கண்டேயர் பதினாறு வயதில் வதைக்கப்பட வேண்டியவர்தானு வென்றும், கவனித்து முடிவு செய்யவேண்டிய விஷயமாயிருக்கிறது.

அவைகள் சம்மந்தமாய் ஏற்படுத்திய 7 இஷ்யூக்கள் விஷயத்தில் இருதரப்பு வக்கீல்களும் வாதஞ் செய்திருக்கிறதை கவனிக்கப்பட்டிருப்பதாலும், உபயதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ரிக்கார்டின் பலத்தைக்கொண்டும், கவனிக்கும்போது, வாதி சொல்வதுபோல் 1-வது இஷ்யூ தனக்கு சாதகமென்று சொல்வதும், சித்திரபுத்திரர் ரிக்கார்டு நம்பத் தகுந்ததுதான் என்பதும், முற்றிலும் உண்மை. அதை ஆக்ஷேபித்து 1, 2, எதிரிகளின் வக்கீல்கள் நம்பத்தகுந்த ரிக்கார்டு அல்லவென்பது மட்டும் பொருந்தாத காரியமே யொழிய ஆனால் அவர்கள் சொல்வதுபோல் 1-ம் எதிரியாகிய பரமசிவனது அருள்வாக்கின் அர்த்த சாராம்ஸத்தை அறிந்து கொள்ளக் கூடாதவும் தெரிந்தவர்களைக்கொண்டவாது தெரிந்துகொள்ளவும் சக்தியற்ற இயமபுரம் கணக்குப்பிள்ளை சித்திரபுத்திரரின் தவறுதலினால் பரமசிவன் சொன்ன வாக்கியத்தின் அர்த்தத்தை வேறு விதமாக அர்த்தஞ்செய்து, அவர் சொன்ன வாசகத்தின் முழு பாகத்தையும் ரிக்கார்டு செய்யாமல் அவரது அபிப்பிராய வாக்குக்கு நேர் விரோதமாக ஏற்படும் அர்த்தத்தை யுடைய ஈரேட்டு என்று மட்டும் எழுதி அதற்கு அர்த்தமும் பதினாறு என்று பிரித்து இயமதர்மராஜருக்கும் தாக்கீது அனுப்பியதை கொண்டு ரிக்கார்டு பிசகென்று ஏற்பட சற்று ஆதாரமிருக்கினும் ரிக்கார்டு நம்பத் தகுந்ததே ஒழிய வேறல்ல. ஏனெனில் சித்திரபுத்திரர் தான் இப்போது ஷை "ஈரேட்டு" என்னும் பதத்திற்கு அர்த்தம் ஏற்படுத்தி அந்த அர்த்தமாகிய 16 என்பதையே எழுதப்படாமல் "ஈரேட்டு" என்ற நிச்சய மில்லாதது என்னும் வேறு அர்த்தத்தை கொடுக்கக்கூடிய பதமே ஷை ரிக்கார்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதைக்கொண்டும், அந்த அர்த்தமும் பரமசிவனது வாக்குக்கு சற்றும் பொருந்தக்கூடிய தாயுமிருக்குமாதலினாலும், ஷை ரிக்கார்டு நம்பத் தகுந்ததும், யோக்கியதை யுடைய தென்பதைக் காட்டுகிறது. ஆனால் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மாகபுராணம் மார்க்கண்டேயர் பிறப்புரைத்த

அத்தியாயம் என்னும் நூலில் 8-வது செய்யுளினுல் பரமசிவன் ஆதியில் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது 16 அல்லவென்றும், எந்தக்காலத்திலும 16 வயதோடு ஞானவாளுயிருக்கும்படி வரங்கொடுத்திருக்கிருரென்பதும் முற்றிலும் உண்மையென விளங்குகிறது. மேலும், 1-ம் எதிரியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் காமதகனம் கிரிமினல் கேஸ் ரிக்கார்டிலும் ஸ்ரீ வைகுண்டம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டவர்களாலும் சித்திர புத்திரர் ரிக்கார்டு நம்பத்தகுந்ததெனவே மதித்து அதைநம்பியே தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஷை ரிக்காடு முற்றிலும் நம்பத் தகுந்ததாகும்.

2-வது இஷ்யூ சம்பந்தமாய் இயமதர்மராஜர் மார்க்கண்டேயரை சிவபூஜை நேரத்தில் பாசத்தால் பிடித்தது அவர் உத்தியோக முறைமையில் நியாயந்தாஞவென்பதைப்பற்றி வாதிவக்கீல் நியாயந்தானென்பதற்கு சிலஆதாரங்கள் காட்டியும், எதிரிகள் வக்கீல்கள் நியாயமல்ல வென்பதற்கு பல ஆதாரங்கள் காட்டியும், வாதித்த விவாசங்களை கவனிக்கப்பட்டது. அதில் வாதி சொல்வதுபோல ஆயசு முடிந்தவுடன் இயமன் பிடிக்க வருங் காலத்தில் சிவபூஜையையோ, விஷ்ணுபூஜையையோ, மற்றெந்த பூஜையையோ, கைவிடாமல் சதாபூஜித்து வந்தாஞல் அத்தருவாயில் அவனை வதஞ்செய்யவேணடி பாசம் எமதண்டம் உபயோகித்தல் இயமபுரம் சட்டத்திற்கு முற்றிலும் விரோதமாயிருந்தாலும், அச்சமயம் அந்த ஜீவனை அதஞ் செய்யவேண்டியது அவசியமாயிருந்தால் அச்சட்டத்திற்கு விரோதமாய் பாசம், இயமதண்டம் பிரயோகஞ்செய்து உயிரையும் அகஞ்செய்யலாமென்று வாதி சொல்லும் விவாதம் முற்றிலும் தவறுதலாகவே ஏற்படுகிறது. இந்த வாதியாகிய இயமனை சம்ஹார கர்த்தாவாகிய 1-ம் எதிரி பரமசிவன் சம்ஹாரத் தொழிலை நடத்தும்படி நியமித்து அதற்காக சட்டமு மேற்படுத்தி அதன்படி நடக்க ஆக்ஞாபனை செய்தி

ருக்க, அச்சட்டத்தை மீறி ஒரு காரியஞ் செய்ய என்ன
அவசரமும் அக்கரையும் இந்த வாதிக்கு ஏற்பட்டிருக்கிறது?
சட்டவரம்பு கடக்காமல் நடக்கவேண்டியதே உத்தியோகத்திற்
கடுத்த தொழிய அதற்கு மாறுதலாக செய்தால் அது தவறுத
லாக வேற்படுமென்பது இந்த வாதிக்குத் தெரியாதா? அப்படி
ஒருக்கால் இப்பேர்ப்பட்ட சமபவம் சிவபக்தனோ, விஷ்ணு
பக்தனோ ஆயசு முடிந்த பிறகு இயமன் பிடிக்கப் போகுஞ்
சமயம் சதா வேத கடவுளை இடைவிடாது பூஜித்து வருவா
னானல் அது விபரத்தை சம்ஹார கர்த்தாவாகிய பரமசிவ
னுக்கு தெரிவித்துவிட வேண்டியவரே ஒழிய, அது விஷயமாய்
சட்டவரம்பு மீறி வாதி யிவ்விதம் நடக்க எவ்வளவும் ஆதார
மில்லை. மேலும், வாதியின் வேலைக்காரனனவரும் வாதி பக்கம்
1-வது சாக்ஷியுமான காலன் என்பவன் தன் வாக்குமூலத்தில்
மார்க்கண்டேயர் சதா சிவபூஜை செய்து கொண்டிருந்ததால்
சிவபூஜை நேரத்தில் பாசம் இயமதண்டம் உபயோகிக்கக்கூடா
தென்று இயமபுரம் சட்டத்தில் சவிஸ்தாரமாய் சொல்லப்பட்டி
ருப்பதால் அதற்கு விரோதமாய் நடக்கக் கூடாதென்று
மார்க்கண்டேயரை வதஞ்செய்யாமல் வாதியிடம் நடந்த
விஷயத்தை தெரிவித்துவிட்டதாய் வாக்குமூலம் கொடுத்தி
ருக்கிறார்.

அப்படி வாதியின் வேலைக்காரனும் மற்ற இயமபுர
வாசிகளும் இயமபுரச் சட்டத்திற்கு பயந்தும் கீழ்படிந்தும்
நடக்க அதற்கு அதிபராயும் வேதி சட்டத்தை அமுல் நடத்தப்
பட்டவராயுமுள்ள இந்த வாதி சட்ட வரம்பு மீறி நடத்தல்
பெருத்த தப்பிதம். இது சம்பந்தமாய் எதிரிகளின் வக்கீல்கள்
விவாதஞ்செய்வது முற்றிலும் பொருத்தமான விஷயம்;
ஆகவே, 2-வது இஷ்யூ வாதியின் தப்பிதமாக ஏற்படுகிறது.

3. மூன்றாவதான "ஆதியில் பரமசிவன் மார்க்
கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறுதான்" என்பதைப்

பற்றி வாதி வக்கீலாலும் எதிரி வக்கீல்களாலும் வாதிக்கப்பட்டிருக்கும் விவாதங்கள் கவனிக்கப்பட்டது.

அதில் வாதி சொல்வதானது இயமபுரம் கணக்குப்பிள்ளை சித்திரபுத்திரரின் ரிக்கார்டு நம்பத்தகுந்ததென்றும், அந்த ரிக்கார்ட்டில் மார்க்கண்டேயருக்கு வயது நிர்ணயம் பதினாறு தானென்று பதிவு செய்யப்பட்டிருப்பதாயும், அதன்படி சித்திர புத்திரர் கொடுத்த யாதாஸ்தின் பிரகாரமே மார்க்கண்டேயரை வதஞ்செய்யப் போனதாயும், பரமசிவனானவர் மிருகண்ட மகரிஷியிடம் மார்க்கண்டேயருக்கு வயது குறிப்பிட்டு வரமளித்த அதே சமயத்தில் எழுதப்பட்டதான சித்திரபுத்திரரின் ரிக்கார்டு முற்றிலும் வாஸ்தவமென்றும், அதில் சொல்வது போல் ஈரெட்டு என்பது பதினாறென்ற அர்த்தத்தை கொடுப்பதால் ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறுதானென்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மாகபுராணம் மார்க்கண்டேயர் பிறப்புரைத்த அத்தியாயமென்னும் ரிக்கார்ட்டில் 6, 7, 8-வது சுலோகங்களினால் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறு தானென்று தெரியவருவதாயும், இன்னும் பலவற்றால் வாதிக்கிறார். எதிரிகளின் வக்கீல்கள், பரமசிவனானவர் மும்மூர்த்திகளில் ஒருவரும் ஈஸ்வராம்ஸம் பொருந்தினவரும் சம்ஹாரகர்த்தரும் தயை தாக்ஷண்யம் பக்ஷபாதம் முதலியது இல்லாதவரும் கேட்ட வரங்களை கொடுக்கப்பட்டவரும் அந்த வரங்களுக்கு விரோதமாய் நடவாதவரும், சொன்னசொல் மாறாதவருமாயிருப்பவருமாகையினால் இந்த மார்க்கண்டேயருக்கு எந்தக் காலத்திலும் பதினாறு வயதோடு ஞானவானாயிருக்கும்படியான வரத்தை ஆதியில் கொடுத்ததாயும், பதினாறு வயதிலிறந்துபோகும்படி வரங்கொடுக்கவில்லையென்றும், பரமசிவன் ஸ்டேட்மெண்ட்டு கோர்ட்டில் கொடுத்திருப்பதால் அதுவே உண்மையான விஷயமெனவும், கற்பகோடிகாலம் தவஞ்

செய்து பரமசிவனை நேசித்து அதன் மூலமாய் தான் பெற்ற வாமே தன்னை யெரித்த தென்னும் பத்மாசூரன் வரலாற்றை யும் ஆதாரமாக காட்டி இச்சம்பவித்திலும் தான் கொடுத்த வரம் பொய்யாய் கெட்டுபோகாதபடி பதினாறு வயதில் வதைக்க வந்த இயமனையும் உதைத்துக் கொன்றிருப்பதால் பரமசிவன் வாக்கு மூலத்தில் சொல்லிய பிரகாரம் மார்க்கண்டேயருக்கு ஆதியில் பரமசிவன் பதினாறு வயது ஆயசு என்று வரங் கொடுக்கவில்லையென்று தெரிவதாலும், மார்க்கண்டேயர் பிறந்த ஜாதக ஆரூடமும் சதா ஞானவானு யிருப்பானென்று விளங்கு வதாலும், அதற்கு ஏற்ப மார்க்கண்டேயரும் சதா சிவபூஜிதரா யிருப்பதாலும், ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது 16 அல்லவென்றும், வாதிக்கிறார்கள்.

இந்த இஷ்யூவானது இந்த கேசின் முடிவுக்கு ஆதாரமா யுள்ளதாக வேற்படுகிறது. இதில் இருதரப்பு வக்கீல்களும் வாதிப்பதில் மாகபுராணத்திலுள்ள மார்க்கண்டேயர் பிறப் புரைத்த அத்தியாயம் 6, 7, 8, இந்த மூன்று சுலோகங்களையே தங்களுக்கு ஆதாரமாக வாதாடுவதால மற்றவைகளை எல்லாம் புறம்பேவிடுத்து இந்த 3 சுலோகங்களை மட்டும் முதலாவது கவனிக்குமிடத்து, பரமசிவனது அருள் வாக்கின் அர்த்தத்தை யறிந்து கொள்ளக்கூடாத இந்த வாதியும் அவர் கணக்கப் பிள்ளை சித்திரபுத்திர ரென்பவருக்கும், கவனியாத மிதந்த புத்தியாய் மார்க்கண்டேயர் பிறப்புரைத்த அத்தியாயம் 6, 7, 8, இந்த சுலோகங்களின் அர்த்தத்தை வேறுவிதமாய் உண்மை மனதுடனே நினைக்கவு மேற்பட்டிருப்பதின் காரணம் பரமசிவன் மிருகண்டமாரிஷியைப் பார்த்து நூறு வயது வரையிலிருக்கும் துர்ப்புத்தியுள்ள புத்திரன் அருளவா, 16 வயதுவரையிலிருக்கும் சற்புத்திரனாக அருளவாவென்று கேட்ட காலததில் மிருகண்ட மாரிஷியானவர் வயது குறைந்தாலும் சற்புத்திரனாக அருள வேண்டுமென்று கேட்கவே அதன்படியே ஈறெட்டு வயதி லிருக்கும் புத்திரனைக் கொடுத்தேன் என்று பரமசிவன்

சொல்லவே, சித்திரபுத்திரரானவர், மிருகண்டமாரிஷியானவர் எப்போது வயது குறைந்தாலும் சற்புத்திரனாக விருக்கவேண்டு மென்று கேட்டாரோ, அப்போது பரமசிவன் முன் சொன்ன பிரகாரம் 16 வயதுடைய புத்திரனைத்தான் கொடுப்பாரென் றெண்ணி, ஈரெட்டு என்ற அர்த்தமும் ஒத்திருப்பதால் 16 வயதென்று ரிக்கார்டு செய்ய நியாயமேற்பட்டு, அதன்படியே ரிக்கார்டு செய்துவிட்டார். அதையே ஆதாரமாகக்கொண்டு வாதி வக்கீலும் வாதிக்கிறாரேயொழிய, அப்பரமசிவனது அருள் வாக்கின் அர்த்தசம்பிரதாயத்தையும் அவரது எண்ணத்தையும் கண்டறிந்தாரில்லை. இது விஷயமாய் வாதியால் வாதிக்கப்படும் விஷயங்கள் முற்றிலும் தவறுதலென்பது உண்மையான விஷயம். 6வது செய்யுளில் சொன்ன பிரகாரம் பரமசிவன் 16வயதுவரை உயிருடனிருக்கக்கூடிய சற்புத்திரன் வேண்டுமா; 100வயது வரையில் உயிருடனிருக்கக்கூடிய துற்புத்தியுள்ள புத்திரன் வேண்டுமா வென்று மிருகண்ட மாரிஷியைப் பார்த்து கேட்டதானது, இரண்டில் ஒன்றைக்கொடுக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பரமசிவனுக்கில்லையென தெளிவாய்ப் புலப் படுகிறது. அதானது மிருகண்ட மகாரிஷியின் மனதைச் சோதிக்கவேண்டி கேட்ட கேள்வியேயாகும். வாதி சொல்வது போல் 16வயது வரையி விருக்கக்கூடிய புத்திரனை மிருகண்ட மாரிஷிக்கு அருளினாரென்றால், 8வது செய்யுளில் துயரந்தீர்ந்து வாழ்தி யென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. பரமசிவனது அபிபபிராயத்தையும் அவர் சொன்ன வாக்கியத்தின் அர்த்த விஷயத்தையும் ரிக்கார்டு செய்த சித்திராபுத்திரரும் வாதியும் அறிந்துகொள்ள வில்லையோ வென்றால் ஷை வரத்தைப் பெற்ற மிருகண்ட மாரிஷியும் அறிந்து கொள்ளவில்லை.

அதானது கீழ்க்கண்ட செய்யுள் ஆதாரத்தினல் தெளிவாய்ப் புலப்படுகிறது.

வேலைதோறுஞ் சடங்கியற்றிச் சவுளவுப நயனமிவை விதியிற்செய்து
சீலமறை யோருநாலு மங்கமவை யிருமூன்றும் தெருளச் செப்பி
பாலகனும் மார்க்கண்டன் தலைப்பரிவால் வளர்த்திடலும் பண்பினோங்கி
ஞானமெலாம் புகழ்ந்தேற்ற கலைமதிபோல் நாடோறும் வளரும் நாளில்

இத்தியாதி செல்வாக்குடன் மார்க்கண்டன் வளர்ந்து வரும் நாளில்.

தீருது தவப் புதல்வனுக்குத் திருவயதீரெட்டு வந்து சேருங்காலை
பெருந்தகைதன் தாய்தந்தை யனுதினமு மழுதிரங்கு பெற்றி கண்டு
வருந்தியழு திடவடுத்த வாறென்கொல் துறைத்தியெனு மகவைநோக்கி
அருந்துயர முளக்கவற்ற வாற்றாத தாதை யீதறையலுற்றான்.

அவ்விதம் துயாமுற காரணம் யாதென வினவிய மகனை நோக்கி மிருகண்ட மகாரிஷி சொல்வதாவது:—

நெடுங்கால மகவின்றித் தவஞ்செய்துச் சிவனருளால் நினையீன்றேன்
விடங்காலு மரவணிவான் ஒருபதினறு ராண்டுனக்கு விளம்பியிட்டார்
ஒடுங்காத புகழுடையோய் உற்றதந்தப் பதினாறண் டதனுலுள்ளம்
நடுங்கானின் றனமென்றான் அதுகேட்டு மார்க்கண்டன் நவில்வதானான்.

அவ்விதம் சொல்லக் கேட்ட மார்க்கண்டன் திடதைரியத்துடன் சொல்வதாவது:—

ஈங்கிதற்கோ துயறுறுதல் எனைக்குறித்து நீருளத்தி லிரங்கவேண்டாம்
வாங்குதிரைக் கடல்நெஞ்ச முண்டமரர் தமக்குதவு மருக்கந் தீர்த்தான்
றீங்கடியா ரிடாகற்றும் சிவபெருமான் றனக்கடிமை செய்துயானேன்
பாங்கில்வரு காலனை வென் றென்று மீற வாதபடி பயில்வேனென்றான்.

இந்த ஆதாரங்களைக் கொண்டு பரமசிவன் கொடுத்த வரத்தின் அருத்தத்தை மிருகண்ட மகாரிஷியுங்கூட அறிந்து கொண்டாரில்லை என்று விளங்குகிறது.

இதுகள் விஷயமாய் வாதி வக்கீல் வாதிப்பதெல்லாம் தனக்கு பாவற்று விஷயங்களுடம தெரிந்திருந்தாலும் கஷ்டகாகவும் பக்ஷின் சாமாத்தியமாகவும் வாதிக்கிறாரே யொழிய வேறில்லை.

பிரதிவாதிகளின் வக்கீல்கள் இது விஷயமாய் சொல்வ தெல்லாமுண்மையாகவே யேற்படுகிறது பாமசிவனே கோசி அநேக ஸ்தலங்கள் சுற்றி கடைசியில் இயமபடாள்வந்து மார்க்கண்டேயரை பிடிக்கவந்த காலத்தில் பாமசிவனுவர் மார்க்கண்டன் தெரியாத் தன்மையால் தன்வயதின் நிர்ணயந் தெரியாமல் பயப்படுகிறு னென்றெண்ணி மார்க்கண்டனை நோக்கி "பாலனே பயப்படாதே பகர்ந்தனல் வயதீரெட்டும் ஞாலத்தோர் அறியத்தந்தேன் நாளுமேண் பதினுறுக" வென்று தலைப்பினையுடைய பாட்லாக மார்க்கண்டனுக்கு தைரியம் சொல்லியிருக்கிறுர். அதில் " பகர்ந்தநல் வயதீரெட்டும் ஞாலத்தோர் அறியத்தந்தேன் " என்று சொல்லியிருப்பதில் வியக்தமாக ஆதியிலேயே பாமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்திருக்குகிற வயது எந்தக் காலத்திலும் பதினறு வயதுடனே ஞானவானு யிருக்கும்படியாகத்தான் என்று விளங்குகிறது. இதைச் சிலர் பாமசிவன் மார்க்கண்டன் செய்த தொண்டூழியத்திற்காக மெச்சி ஆதியில் கொடுத்திருந்த வாத்தை மாற்றி அச்சமயத்தில் இந்த வாம் கொடுத்திருக்கிறு ரென்று சொல்லுகிறுர்கள். அதற்கு அர்த்தம் கொஞ்சமேனு மிடங்கொடுக்கவில்லை. " தந்தேன் " என்பது இறந்த காலத்தை காட்டுகிறதே ஒழிய நிகழ் காலத்தை காட்டவில்லையாகையால் ஆதியில் பாமசிவன் கொடுத்திருந்த வாத்தையே திரும்பவும் மார்க்கண்டேயருக்கு தெரியப்படுத்தினுரென்பது உண்மையான விஷயம். மேலும் பாமசிவன் வாக்கு ஒருக்காலும் பொய்யாகாது. அப்படி பொய்சொல்ல வேண்டிய அவசரமும் அவருக்குக் கிடையாது. ஒருவர் நல்லவர், ஒருவர் கெட்டவர் என்ற வித்யாசமும் பக்ஷபாதமும் அவர் செய்பவரல்ல. ஆகவே ஒருக்கால் சொன்ன வாத்தை மாற்றி மறுதடவை வேறு

விதமாய் பய[illegible] சொல்லவில்லை யென்றும், பரமசிவன் மார்க்கண்டேயருக்கு [illegible] ஆகியிலேயே வயதோடே ஞானவானுமிருக்கக் கூடியதாக வரங்கொடுத்திருக்கிறார் என்பதும் உண்மையான விஷயம். ஆகையால் பரமசிவன் ஆகியில் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது பதினாறல்ல வென்பது முற்றிலும் உண்மை.

நாலாவதான "எக்காரணத்தைக் கொண்டோ பரமசிவன் இயமனை யுதைக்க நியாய முண்டா" வென்பதைப்பற்றி உபய தரப்பு வக்கீல்களாலும் வாதிக்கப்பட்ட விவரங்கள் கவனிக்கப் பட்டது. அதில் வாதி வக்கீல், இயமதர்மராஜர் சகுந்த அந்தஸ்தும் கௌரவமுமுள்ளவ ரென்றும், அவர் இந்த தாவா சம்மந்தமான மார்க்கண்டன் விஷயத்தில் ஏதேனும் தவறுதல் செய்திருந்தபோதிலும் அவருக்கு அபராதம் விதித்தல், வேலையை விட்டுநீக்கல் ஆகிய பலவித தண்டனைகள் விதிக்க 1ம் எதிரிக்கு அதிகார மிருக்கிறதே யொழிய, அவயவங்களி லெல்லாம் தாழ்ந்ததாக மதிக்கப்படும் காலா லுதைத்தல் வாதிக்கு பெருத்த மான யீனத்தைக் கொடுத்ததென்றும, காலாலுதைக்க 1-வது எதிரிக்கு எவ்விதத்திலும அதிகாரமே யில்லை யென்றும், அவர் செய்தது சட்டத்திற்கு முற்றிலும் விரோதமென்றும், வாதிக்கும் விஷயங்கள், தாவா 1-ம் எதிரியைப் பற்றினமட்டில் குற்றமாக ஏற்பட நியாயமில்லை யென்பது உண்மையாக ஏற்படுகிறது. அது சம்மந்தமாய் 1-ம் எதிரி வக்கீலானவர், பரமசிவன் இயமனை காலா லுதைத்தது பிசகல்ல வென்றும், அவயவங்கள் ஒன்றுக் கொன்று மேல்கீழ் என்பது கிடையாதென்றும், அந்தந்த அவயவங்களின் தொழிலை மற்ற அவயவங்கள் செய்ய முடியாதாகை யால் அவயவங்கள் யாவும் சமத்துவ முடையதே யொழிய உயர்வு தாழ்வு என்ற வித்தியாசங் கிடையாதென்றும், மேலும், அவ்வித்தியாசங்களும் மாயா சம்பந்த கற்பனையால் உயர்வு தாழ்வு ஏற்படுத்திக் கொண்டவர்களுக் கின்றி மற்றவர்களுக்கு சயமே யென்றும், பரமசிவன் மாயா சம்மந்தத்தில்கட்டுப்படாதவருகை

...யனப்பவரல்ல வென் ...ம், இயமனை சுலபமாய் கண்டிக்க, அவனது திரேகத்திற்கு சமீபத்திலுள்ள தன்பாதத்தால் தண்டனை செய்தாரே யொழிய இயமனை அவமானஞ் செய்யவேண்டி காலா லுதைக்கவு மில்லை யென்றும், அதனால் இயமனுக்கு மரியாதை யீனம் சம்பவிக்கவு மில்லை யென்றும் 1-ம் எதிரியாகிய பரமசிவன் மீது யாதொரு குற்றமுமில்லை யென்றும், வாதிக்கும் விஷயங்கள் யாவும் சரி யாகவே புலப்படுகிறது.

வாதி தன் பிராதில் தெய்வலோகம் பினல் கோடு 176வது செக்ஷன்படி கொலைக் குற்றத்திற்காக, 1ம் எதிரியை தெண்டனை செய்யவேணுமென்று கோரியிருப்பதாலும், 1ம் எதிரியும் அதை ஒப்புக்கொள்வதாலும் ஷை சம்பவம் நடந்ததும் உண்மையாகவே யிருப்பதாலும், வாதியின் உயிர் நீங்கின பிறகு சடத்திற்கு மானநஷ்டமும் மரியாதை யீனமும் கிடையாதாகையால் இவ் வாதிக்கு மான நஷ்ட மேற்பட மார்க்கமில்லை. ஒருவன் கொலை செய்யப்பட்டா னென்றால் ஆயுதங்களால் வதைக்கப்பட்டாலும் அவயவங்களில் கையால் அடிக்கப்பட்டாலும், காலால் உதைக்கப் பட்டாலும் இவைகளெல்லாம் கொலைக்குற்றத்தை மாத்திரம் குறிக்குமேதவிர, காலா லுதைக்கப்பட்டு வதைக்கப்பட்டால் பலமான கொலைக்குற்றமென்றும், கையால் வதைக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டாலும் ஆயுதங்களால் வதைக்கப்பட்டாலும், குறைவான கொலைக்குற்றமென்றும், ஏற்படமாட்டாதாகையால் பரமசிவன் இயமனை காலாலுதைத்து வதைத்தது கொலைக்குற்றம் ஒன்றுமாத்திரம் சம்பவிக்குமேயொழிய வாதிக்கு மானநஷ்டமும் மரியாதை யீனமுஞ் செய்ததாகிய குற்றம், 1-ம் எதிரிபேரில் ஏற்படமாட்டாது. 1-ம் எதிரி வக்கீல் சொல்லுவதுபோல் காலால் உதைத்தாலும், கையால் அடித்தாலும், மற்ற எந்த அவயவங் களால் இம்சை செய்தாலும், அவயவங்களில் உயர்வு தாழ்வு என்பதில்லாததால் வாதிக்கு மான நஷ்ட மேற்படமாட்டா தென்றும், 1-ம் எதிரிக்கு அவ்வித அவயவ வித்தியாசங் கிடை யாதென்று வாதித்தாலும், அச்செய்கைகள் தனக்கு மரியாதை

யீனமென்று வித்தியாசம் பாராட்டும் நிலைமையிலுள்ள வாதிக்கு மரியாதையீன மேற்பட்டிருக்குமென்று ஒருக்கால் யோசித்தாலும், பரமசிவனது பாததூளிபடும்படியாய் எவ்வளவோ காலங்களாக தபோதனர்களும் மகரிஷிகளும் கற்பகோடிகாலம் தவஞ்செய்தும் கிடைக்க துர்லபமானவும், அதிக பரிசுத்தம் பொருந்தியதும கிடைக்கத்தகாததுமான யோக்கியதையோடுங் கூடிய பாதம் இயமன்மீது பட்டதால், இயமனுக்கு அதிக கவுரவத்தையும், யோக்கியதையையும், மேலான ஞானத்தையும், புகட்டியிருக்கிறதே யொழிய மரியாதை யீனமேற்படவே யில்லையென்பது 1-வது எதிரியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறமாக புராணம், மார்க்கண்டன் பிறப்புரைத்த அத்தியாயம் என்னும் நூலின் 65ம் செய்யுளில் "வீழ்ந்த நமனும் விதிவழியே நீரோழுக" யென்னும் தலைப்பினை யுடைய பாடலில் சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டு தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆகையால் 1-வது எதிரியாகிய பரமசிவன் வாதியைக் காலாலுதைத்தது வாதிக்குமான நஷ்டம் கிடைக்கத்தக்க குற்றமல்ல வென்றும், அவ்விதம் செய்தது நியாயமே யென்றும் புலப்படுவதால் 4-வது இஷ்யூவும் வாதிக்கு சாதகமாக வேற்படவில்லை.

5வதான "பரமசிவன் இயமனைக்கோன்றது நியாயமா" வென்பதைப் பற்றி வாதி வக்கீல் வாதிப்பதெல்லாம், ஆதியில் பரமசிவன் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது 16தான் என்றும், அந்த பதினாறு வயது முடிந்தவுடன் தான் மார்க்கண்டேயரைப் பிடிக்கப்போனதாயும், 1வது யெதிரியின் உத்திரவுப்படியே சம்ஹாரத் தொழிலை நடத்திவரப்பட்டவனாதலால் அச்சமயமும் அவரது உத்திரவையே நிறைவேற்றப்போன சமயத்தில் கொஞ்சமேனும் முன்பின் யோஜிக்காமல் வாதியைப் பரமசிவன் உதைத்துச் சூலத்தால் குத்திக்கொன்றதானது பெருத்த குற்றமென்றும், இதைப்போல் பரமசிவன் தன் மனம்போன போக்கெல்லாம் அடாத செய்கைகள் நடத்தி யிருப்பதாயும் அநேக செய்கைகளை உதாரணங்களாகக் கூறி வாதிக்கிறார். எதிரி வக்கீல், ஆதியில்

மார்க்கண்டேயருக்குப் பரமசிவன் கொடுத்த வயது எந்தக் காலத்திலும் 16 வயதோடே ஞானவானயிருக்கும்படி கொடுத்ததே தவிர 16 வயதுதான் ஆயிசுயென்று கொடுக்கவில்லையென்றும், அதைக் கவனியாது இவ்வாதியானவர் 16 வயதில் மார்க்கண்டனைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டதாயும், அச்சமயம் தான் கொடுத்த வரம் கெட்டுப்போகாமலிருக்கும்படியாய் இயமனை உதைத்து சூலத்தால் குத்திக்கொன்று பிறகு எழுப்பியதாயும், இச்செய்கைகள் செய்ததெல்லாம் வாதிக்கு புத்தி புகட்டுவதற்காக செய்த செய்கையேயென்றும் அதனல் வாதியைக் கொன்ற குற்றம் தன்னைச் சாருவதற்கு மார்க்கமில்லையென்றும் தெரிவிக்கிருர்

ஆனல் 1ம் எதிரி தெரிவிப்பதுபோல் மார்க்கண்டேயருக்கு பரமசிவன் கொடுத்த வயது 16 அல்லவென்பது உண்மையாயிருக்க, அந்தப் பதினறு வயதில் வதைக்க எத்தனம் செய்த வாதியை அவருக்கு மேல் அதிகாரியாயிருக்கும் பரமசிவன் ஏதேனும் அபராதம் தண்டனை யேற்படுத்த வேண்டியதிருக்க, கொல்லுவதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. அவ்விதம் கொன்றதானது 1ம் எதிரியான பரமசிவன்மீது குற்றமாக ஏற்பட வேண்டியதாயினும், மார்க்கண்டன்மீது இயமன் பாசம் வீசின பிறகு பரமசிவன் கொடுத்த வரம் கெட்டுப்போகாமலிருக்கும்படி செய்யவேண்டிய விஷயத்தில்,வாதியை கொன்றலல்லது மார்க்கண்டன் உயிரை மீட்கமுடியாது. ஏனெனில் பாசம் யார்மீது வீசப்பட்டதோ அதற்குள்ப்பட்டுக்கொண்ட உயிர் அப்பாசம் வீசிய இயமன் உயிருடனிருக்கும் வரையில் மீளாது. ஆனதுபற்றி, இயமனைக்கொல்லாத விஷயத்தில் அச்சமயத்தில் மார்க்கண்டன் உயிரை மீட்கமுடியாததலின், தன் வரம் கெட்டுப் போகாதபடி மார்க்கண்டனை மீட்க வேண்டி இயமனைக் கொன்றது நியாயமாகவேற்படுகிறது. ஆனலும், பரமசிவனனவர் ஈசுவராம்சம் பொருந்தினவராயும் திரிகாலவர்த்தமானமுணர்ந்து

கொள்ளக்கூடியவராயிருந்தும், மார்க்கண்டனை பதினறு வயதில் இயமன் வதைக்க வந்த தப்பிதம் இயமனுல் நேர்ந்ததல்லவென்றும், சித்திர புத்திரர் கணக்குத் தவறுதலால் நடந்ததென்றும் அறிந்துகொண்டு இயமன் பாசம் வீசுவதற்கு முன்னதாக தெரிவித்து, சித்திரபுத்திரர் கணக்குகளை பரிசோதனைசெய்து சரிவர நடத்திவராத குற்றத்திற்காக இயமனையும் ஒருவாறு கண்டனை தெண்டனை ஏற்படுத்தி மார்க்கண்டனை வதைசெய்ய வேண்டாமென்று தடுத்து மிருக்கலாம். அவ்விதஞ் செய்யாமல் இயமனை வதைசெய்தது நியாயமல்லவென்று யூகிக்கவேண்டியதாக விருக்கின்றது. ஆப்படிக்கிருந்தும், இயமன் பாசம் வீசும் வரையில் பார்த்திருந்து, பிறகு இயமனை வதைசெய்சதானது, இயமபுரம் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு விரோதமாய் இவ்வாதி, சதா சிவபூசையிலிருக்கும் மார்க்கண்டன்மீது பாசம் வீசமாட்டானென்று, மற்றவைகளை கவனியாது என்ன நடக்கிறதென்று கவனித்துக்கொண்டுமிருக்கலாம். அவ்விதமிருக்கும்சமயத்தில்இயமன் பாசம் வீச பரமசிவனுக்கு கோபம் பிறந்து ருத்திர ஆவேசங்கொண்டு இயமதர்மருஜனுக்கு மூணே முக்கால் நாழிகை கண்டமேற்படவேண்டிய சமயமும் தொடர்ந்து கொண்டபடியால் வாதியை சூலத்தால் குத்திக்கொன்றிருப்பதானது 1ம் எதிரியான பரமசிவன்மீது யாதொரு குற்றமும் ஏற்பட மார்க்கமில்லையென்று வியக்தமாய் புலப்படுகிறது. சகல ஜீவராசிகளின் உயிரையும் ஆயசு நிர்ணயம் கழித்து வதைசெய்யும்படி இயமதர்மருஜனுக்கு பரமசிவன் அதிகாரம் கொடுத்து, அவ்விதமே இயமன் செய்துவரும் கொலைக் குற்றத்திற்கு எப்படி இயமன் பாத்தியஸ்தன் அல்லவோ, அவ்விதமாக, இயமனை ஆயசு நிர்ணயப்பிரகாரமும், சித்ரபுத்ரரின் கணக்குப்படிக்கும் சம்ஹார கர்த்தாவாகிய பரமசிவன் வதை செய்திருப்பதானது 1ம் எதிரியாகிய பரமசிவன்மீது குற்றமேயில்லை. ஆகவே 5-வது இஷ்யூவும் 1-வது எதிரிக்கு சாதகமாக வேற்படுகிறதேதவிர வாதிக்கு சாதகமாக வேற்படவில்லை.

6. ஆருவதான "மார்க்கண்டேயர் பதினாறு வயதில் வதைக்கப்பட வேண்டியவர்தானா" என்பதைப்பற்றி உபய தறப்பு வக்கீல்களாலும் வாதிக்கப்பட்ட விவாதங்களை கவனிக்கப் பட்டதில் வாதி வக்கீலானவர் 1ம் எதிரி கொடுத்த வரம் மார்க் கண்டேயர் பதினாறு வயது வரையில் இருக்கவேண்டியதான வயதுதான் கொடுத்தாரென்றும், அதன் பிரகாரம் பதினாறு வயது முடிந்தவுடன் சம்ஹார கர்த்தாவாகிய பரமசிவனது உத்திரவுப்படி அதிகாரத்தை நடத்தும் வாதியாலோ, அல்லது அவருக்கு பதிலாய் அதிகாரம் செலுத்தும் மற்ற எந்த அதிகாரி யாலோ, மார்க்கண்டேயர் வதைக்கப்பட வேண்டியதிருக்க, 1ம். எதிரியின் சகாயத்தால் உயிருடனிருத்தல் சட்ட விரோதமும் நியாய விரோதமுமானதென்று வாதிக்கிறார். எதிரிகளின் வக்கீல் கள் பரமசிவன் வாக்கால் மார்க்கண்டேயருக்கு கொடுத்த வயது 16 அல்லவென்றும், எக்காலத்திலும் பதினாறு வயதாகவேயிருக் கும்படியான வரம் கொடுத்திருக்கிறாரென்றும், 1ம். எதிரியின் ஸ்டேட்மெண்டை கொண்டே அதுவிபரம் உண்மையென புலப் படுகிறதென்றும், தவறுதலாக ரிக்கார்டு செய்த சித்திரபுத்திர ரின் கணக்கை வாதி பரிசோதனை செய்யாததின் குறைவால் இவ்வித சம்பவம் நடந்திருக்கிறதென்றும் வாதிக்கிறார்கள். வாதி வக்கீல் சொல்வதுபோல் மார்க்கண்டேயருக்கு ஆதியில் பரம சிவன் கொடுத்த வயது 16 என்பது பிசகான விஷயமாதலின், பதினாறு வயதில் மார்க்கண்டேயர் வதைக்கப்பட வேண்டியவ ரல்ல. ஆனால் சித்திர புத்திரரின் ரிக்கார்டு தவறுதலால் இவ்வித சம்பவம் நடந்திருப்பதும், ஷை ரிக்கார்டை பரிசோதனை செய் யாது விடுத்ததானது வாதியின் தவறுதலாக ஏற்படுகிறது. இது விஷயத்தில் எதிரிகள் வக்கீல்கள் சொல்வதெல்லாம் உண்மை யானவும் நம்பத்தகுந்ததுமான விஷயம். இது விஷயங்கள் ஏற் கனவே ருசுவிடப்பட்டிருக்கிறது. ஆகவே மார்க்கண்டேயர் பதி னாறு வயதில் வதைக்கப்பட வேண்டியவரல்ல வென்பது தீர் மானமாவதால், ஆருவது இஷ்யூவும் வாதிக்கு அநுகூலமாக யேற்

படாமல், 2ம் எதிரிக்கு சாதகமாய் யேற்பட்டிருக்கிறது மன்னியில் பரமசிவனது அருள்வாக்கின் பிரகாரம் மார்க்கண்டேயர் எக்காலத்திலும் உயிருடனிருக்க வேண்டியவரேன்று தீர்மானிக்கப்பட்டது.

7. ஏழாவதாக பரமசிவன் காலால் உதைக்கப்பட்டு உயிர் வதைக்கப்பட்டதால் இயமனுக்கு மானநஷ்டம் கிடைக்கவேண்டியதுதானு என்பதைப்பற்றி உபயதரப்பு வக்கீல்களும் வாதிக்கப்பட்ட விவாதங்கள் கவனிக்கப்பட்டது. வாதிவக்கீல் சொல்வதுபோல் இயமதர்மருஜர் தகுந்த அந்தஸ்து, கௌரவம், மரியாதை இத்தியாதி கியாதி உடையவும், நல்ல நீதிமான் என்பதும் உண்மையான விஷயம். அத்தகைய கியாதியோடுங்கூடிய வாதிக்கு இவ்விதமான கஷ்டமேற்பட்டால் அவருக்கு மான நஷ்டம் கிடைக்கவேண்டியது முற்றிலும் நியாயமானது. ஆனல் 1ம். எதிரி வக்கீல் சொல்வதுபோல் வாதியை பரமசிவன் கண்டித்தது உத்தியோக முறைமை யானபடியால், அந்த தெண்டனை நியாயமாயினும், அநியாயமாயினும் வாதி மானநஷ்டம் கேட்க சட்ட ஆதாரமில்லை யென்றும், ஈஸ்வர அம்ஸம் பொருந்திய பரமசிவனது பாதம் வாதியின்மேல் பட்டதானது புகழ்ச்சியை உண்டுபண்ணினதே யொழிய யிகழ்ச்சியை உண்டுபண்ணவில்லை யென்று வாதிக்கும் விவாதம் நியாயமாக தோற்றப்படுகிறது. ஆகிலும் பரமசிவன் எமனை காலால் உதைக்காமல் வேறெந்த அவயவத்தினலும் ஸ்பரிசித்திருக்கின் வாதிக்கு மான நஷ்டம் யேற்படமாட்டாது. பரமசிவன் சொல்வதுபோல் தான் அவயவங்களின் உயர்வு தாழ்வை பார்க்கப்பட்டவரல்ல வென்று சொன்னபோதிலும், அவ்விதம் வித்தியாசம் பாராட்டக் கூடியவருக்கு அவ்வித அவமரியாதையான செய்கை செய்ய கூடாதென்று பரமசிவன் உணர்ந்துகொள்ளக் கூடியவராயிருந்தும், காலால் உதைக்காமல் வேறுவிதமாய் வாதியை தெண்டனை செய்துமிருக்கலாமாகையால் அவ்விதம் செய்ததானது 1ம் எதிரியின்பேரில் குற்றமாக யேற்படவும் நியாயமிருக்கலாம். ஆனல் பரமசிவனுனவர் அவமரியாதை செய்யவேணுமென்ற கெட்ட

எண்ணமின்றியும், அவயவங்களில் உயர்வு தாழ்வு ஏற்படுத்தி, அதை அநுசரிக்கும் நிலைமையில் இவ்வாதி யிருக்கப்பட்டவ னென்று நிதானித்து, அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யக்கூடாத திடீறென்று சம்பவித்த விஷயமாகிய இந்த தாவா சம்மந்தமாய், 1ம் எதிரிபேரில் குற்றம் சாட்டுவதற்கு நியாயமில்லாதிருக்கிறது. மேலும், அவ்வித அவயவத்தின் ஸ்பரிசம் வாதியின் பேரில் பட்டதானது, வாதிக்கு புகழ்ச்சியை கொடுத்ததன்றி இகழ்ச்சியை தராததாலும் பரமசிவத்தின் பேரில் ஷை குற்றம் யேற்பட கொஞ்சமேனும் பார்க்கமில்லை. ஆகையால் 7-வது யிஷ்யூவும் 1ம் எதிரிக்கு பாதகமாக ஏற்படவில்லை.

வாதியின் பிரூதில் கோறிக்கொண்ட விஷயங்களான, 1ம் எதிரிபேரில் கொலைக் குற்றத்திற்காக தெய்வலோகம் பினல்கோடு 176-வது செக்ஷன்படி தெண்டிக்க வேணுமென்றும், தன்னை காலால் உதைத்துக்கொன்றதற்காக, மானநஷ்டம் மரியாதை யீனம் ஏற்பட்டிருப்பதற்கு சிவில் கோர்ட்டில் தனிமையாக தாவா செய்து 1ம் எதிரிபேரில் மானநஷ்டம் வாங்கப்போகிறதாயும், அதற்காக இந்தக் கோர்ட்டார் சாங்ஷன் கொடுக்க வேணுமென்றும், எமபுரம் சட்டப்படி ஆயசு முடிந்த ஜீவராசிகள் வாதியால் வதைக்கப்படவேண்டியதிருக்க, 2ம் எதிரியாகிய மார்க்கண்டேயர் ஆயசு நிர்ணயம் கழித்து உயிருடன் யிருப்பதால், அவரை உடனே வதைசெய்ய தனக்கு உத்தரவு கொடுக்க வேணு மென்றும், 1, 2, எதிரிகள் பேரில் வாதி தாவா செய்திருக்கும் விஷயத்தில், 1, 2, 3, 5-வது யிஷ்யூக்கள் முற்றிலும் 1-வது எதிரிக்கே சாதகமாயும், வாதிக்கு ஒன்றேனும் சாதகமின்றி வாதி பேரிலேயும் சில தவறுதல்கள் ஏற்படுவதாலும், 1ம் எதிரியாகிய பரமசிவன் கௌரவமுடையவரும், தயை, தாக்ஷண்யம், பக்ஷபாதம், முதலியதுகள் யில்லாதவரும், பொய் சொல்லாதவரும், ஈஸ்வர அம்ஸம் பொருந்தினவரும், மும்மூர்த்திகளில் ஒருவரும், சம்ஹார கர்த்தருமா யிருப்பவருமாதலால் அவருடைய கன்யமுள்ள ஸ்டேட்மெண்டைக் கொண்டும், தெய்வ

லோசம் பினல்கோடு 176-வது செக்ஷன்படி வாதியை பரம சிவன் கொன்று பிறகு யெழுப்பிவிட்டபடியால் கொலைக் குற்ற மாக மாட்டாது. உயிர் வதைக்கப்பட்டு யிறந்துபோனால்மாத்திரம் ஷெ செக்ஷன்படி கொலைக் குற்றமாகயேற்படுமேயொழிய, உயிர் போய் உடனே உயிருடன் எழுப்பிவிடப்பட்டால் அக்குற்றம் கொலையாகாது. ஆகையால் 1ம் எதிரிபேரில் யாதொரு குற்றமு மில்லையாதலின 1ம் எதிரியை பிருதின் 176-வது செக்ஷன் படிக்குள்ள குற்றத்தனின்று விலக்கப்பட்டது.

2. இரண்டாவதாக, 1ம் எதிரிபேரில் தன்னை உதைத்து கொன்றதனால் மான கஷ்டம் யேற்பட்டிருப்பதாயும், அதற்காக பரமசிவன்பேரில் சிவில் கோர்ட்டில் தாவா செய்ய சாங்ஷன் கிடைக்க வேணுமென்று வாதி கோரிக்கொண்ட விஷயமாய், 4, 7-வது யிஷ்யூக்களானது வாதிக்கு சாதகமாக யேற்படாததி னால் சாங்ஷன கொடுக்க யாதொரு ஆதாரமுமில்லாதது பற்றி, சாங்ஷன் கொடுக்கப்படமாட்டாதென்று உத்தரவளித்து 1ம் எதிரியாகிய பரமசிவனை பிருதிலிருந்து விலக்கப்பட்டது.

3. மூன்றாவதாக, ஆயுசு நிர்ணயங் கழித்து உயிருட னிருக்கும 2-வது எதிரியாகிய மார்க்கண்டேயரை வதை செய்ய வேணுமென்று வாதி பிருதில் கோரிய விஷயமாய், 6-வது யிஷ்யூவும் 2-வது எதிரிக்கு சாதகமாக ஏற்படுவதாலும், வாதிக்கு அவ்விஷயத்தில யாதொரு ஆதாரமுமில்லாதிருப்பதாலும், 2ம் எதிரியாகிய மார்க்கண்டேயரை பிருதிலிருந்து விலக்கி, அவரை 1ம் எதிரியாகிய பரமசிவன் ஆதியில் கொடுத்த வரத்தின்படியே என்றும் பதினாறு வயதோடே யிருக்கும்படியாய் திருவாக்களிக்கப் பட்டது.

ஆகவே, வாதி பிருதில் கோரிக்கொண்ட விஷயங்களில் ஒன்றேனும் வாதிக்கு சாதகமாக யேற்படாதபடியால், வாதியின் பிருதை தள்ளுபடி செய்து, 2-வது யிஷ்யூப்படி வாதி பேரில் இயமபுரம் சட்ட வரம்பு மீறி சிவனடியாருன மார்க்கண்

டேயரை பாசம் வீசின குற்றம் ஏற்படுவதாலும், ஆனால் அவ்வித குற்றத்திற்காக வாதியையே தண்டனை செய்யவேண்டியிருந்தாலும், முன்னமே அது விஷயத்திற்காக உத்தியோக முறைமையில் சம்மந்தப்பட்டவரான 1ம் எதிரியான பரமசிவன் கண்டனை தெண்டனை செய்திருப்பதால், மறுபடியும் இக்கோர்ட்டார் யாதொரு தெண்டனையும் வாதிக்கு விதிக்காமல், யினிமேல் 1ம் எதிரியாகிய பரமசிவன் உத்திரவுப்படிக்கும், இயமபுரம் சட்டவரம்புக்கு விரோதமின்றியும் நடக்கும்படியாய் வாதிக்கு ஆக்யாபித்து, பிருதை பயிலிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது.

சதாசிவம்

பிர்ம்மதேசம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்.

அவாபாயுகம் 2017-வரு வைகாசி-மீ 30உ

வாழி

முத்தமிழோரும் வாழி, முகவுரை சொன்னேன் வாழி
இத்தரையுள்ளோர் வாழி, இயம்பிய கேட்போர் வாழி
நித்தியம் நிமலன் பாதம், நினைத்தவர் என்றும் வாழி
மூத்தனும் ராமஸாமி மொழியுரை வாழி, வாழி.

முற்றிற்று.

உவணக்